# முரசொலி

ஆசிரியர்: மு.கருணாநிதி

2 அணா

முரசு 1 | சென்னை 3-9-54 வெள்ளி | ஒலி 23


# ராமாயணத்துக்குத் தடை!


## காமராசர் ஆட்சிக்கு கரும்புள்ளி!

### ராதாவுக்கு வாய்ப்பூட்டு! ராஜமாணிக்கத்துக்குப் பாராட்டு!

நடிகவேள் தோழர் எம். ஆர். ராதா அவர்கள் நடத்த இருந்த "ராமாயணம்" நாடகம் சென்னை சர்க்காரால் தடை செய்யப்பட்டுவிட்டது. திருவளூர் தோழர் தங்கராசு அவர்கள் தீட்டியதாகும் அந்த நாடகம். முழுவதும் கற்பனையாக தீட்டப்பட்ட சித்திரமல்ல அது! ராமாயணத்தைப்பற்றி பல அறிஞர்கள் ஆராய்ச்சிப் பூர்வமாகத் தந்த கருத்தை வைத்து தோழர் தங்கராசு அதைத் தீட்டினரே தவிர சர்க்கார் கருதுவது போல புதிய ராமாயணம் அல்ல அது! யாரோ ஒரு ராமனை நல்லவன் என்றும், அவதார புருஷன் என்றும், சர்வ வல்லமை வாய்ந்தவனென்றும் கூறிக் கொள்ள மற்றவர்களுக்கு இருக்கிற உரிமை, மறுப்பவர்களுக்கும் ஏன் இல்லை—ஏன் இருக்கக் கூடாது என்பதே நமது கேள்வி,

அகலிகை — இந்திரனை யாரென்று தெரிந்த பிறகும் இன்பக் கடலில் மூழ்கினாள் என்று ஆச்சாரியார் எழுதலாமாம். அதை நாம் நாடகமாக்கிக் காட்ட அனுமதி கிடையாதாம்! புரோகிதர்களாகிய இருத்துவிக்களும் வேதப் பிராமணர்களும் சோம பானத்தை அருந்தி, பசு—பன்றி—பாம்பு—ஆமை—மச்சம் — முதலியவைகளை யாக குண்டத்தில் வாட்டி திருப்தியாய் புசித்தவுடன் தசரத அரசனின் முதல் மனைவி கௌசல்யா தேவி பஞ்ச கல்யாணிக் குதிரையை. மும்முறை சுற்றி வந்து அதை மூன்று துண்டாக வெட்டி, இரவுமுழுதும் அந்த செத்த குதிரையைக் கட்டித் தழுவிக் கொண்டிருந்து விட்டு, விடிந்த பின் அந்த மனைவியர் மூவரும் இருத்துவிக்களுக்கு, குரு தக்ஷிணையாகக் கொடுக்கப் பட்டு விட்டார்களாம். அவர்களும் ராஜபத்தினிகளுடன் அந்த இரவை இன்பமாகக் கழித்து பிறகு அரசனிடம் அந்த மனைவிமார்களுக்கு ஈடான திரவியத்தைப் பெற்றுக்கொண்டு அவர்களைத் திரும்ப ஒப்புவித்தார்களாம்.

அஸ்வமேதயாகம் நடந்து ராம லக்ஷ்மணர் அவதரித்த அழகை வால்மீகி ராமாயணம் இது போல எடுத்துக் கூறுகிறது.



அதைநாம்சொன்னால் தடை விதிப்பேன் என்று படை திரட்டுகிறார்கள். நாஸ்திகம் என்கிறார்கள். நாடகம் கூடாது என சட்டத்தை வீசுகிறார்கள்.

இராமனும் சீதையும் அருகருகே நெருங்கிப் படுத்து துயில் கொள்ள—தம்பி லக்ஷ்மணன் பக்கத்தே நின்று காவல் புரிய—அப்போது இந்திரன் மகன் சயந்தன், காக்கை உரு வெடுத்து சீதையின் அங்கத்தை சுவை பார்க்க, தூங்கும்சீதைக்கு அது தெரியாமல் போய்—லக்ஷ்மணன் அலற — பிறகு ராமர், காக்கையைத் தண்டித்தார் என்று புராணம் எழுதலாமாம். மூவர்ணப் படங்கள்—காலண்டர்கள் வெளியிடலாமாம். அதைநாம் சொன்னால் பாபமாம்! நாடக மாடினால் தடையாம்!

"ராமாயணம் — பொய்யோநிஜமோ சரியோதப்போ!—ஏதோ பெரும்பாலான ஜனங்கள் மனதிலே ராமன் ஒரு கடவுள்—என்ற மத உணர்ச்சி பரவி விட்டது! அதைப் போய் இப்போது மறுத்து சிலர் மனதைப் புண்படுத்துவானேன்?"

என்று பல்லைக் காட்டிக் கொண்டு பேசுவோரை நாம் பார்த்திருக்கிறோம்.

மத உணர்ச்சி என்ன — மது உணர்ச்சி கூடத்தான் பெரும்பாலான மக்களை ஆட்கொண்டிருந்தது—ஆட்கொண்டிருக்கிறது. அந்த உணர்ச்சியை அழிக்க சட்டம் செய்ய வில்லையா? பிரச்சாரம் புரியவில்லையா? பெரும்பாலான—மக்களின் மனதைப் புண்படுத்துகிறது; அதனால் தடைவிதிக்கின்றனர் என்று பேசுவது மிகத் தவறு! பெரும்பாலான மக்கள் அந்த நாடகத்தை விரும்புகிறார்கள் என்பதையும் நாம் நிலைநாட்டிக் காட்ட முடியும்.

இன்றைய தினம் பெரும்பாலான மக்கள் லக்ஷக்கணக்கில் கூடிநின்று குளித்து மகிழும் கும்ப மேளாவைப் பற்றி அன்றொருநாள் நேரு என்ன சொன்னார்? பெரும்பாலானவர் மனம் புண்படும் என்று எண்ணினால் அவர் அதைச் சொல்ல முடியுமா? னார்

"இம்மேளாவைப் பற்றி 1300 வருஷங்களுக்கு முன் எழுதப்பட்ட விபரங்களைப் படிக்கும் போதும் ஒருவித கவர்ச்சியும் பிரமிப்பும் உண்டாகிறது. அந்தக் காலத்திலேயே மேளா ஒரு பழைய வழக்கமாயிருந்தது. ஆனால் நாம் முன்னேறிச் செல்லும் போது இத்தொடர்பானது நம்மைச் சுற்றிக் கொண்டு பழையவழக்கத்தின் பிடிப்பிலே நம்மைச் சிறைப் படுத்திவிடுகிறது. பழைய வழக்கம் என்கிற தளை நமது முன்னேற்றத்தை தடுக்கும் போதெல்லாம் அதை முன் பின் பாராது அறுத்தெறிய வேண்டும்"

## அன்பழைப்பு

★

தோழரீர்,

9—9—54 காலை, விருத்தாசலம் கோட்டை வெளி வீதி-6, எண்ணுள்ள இல்லில் தோழியர் **ஆண்டாள்** அம்மையை, சிதம்பரம் — மாவட்ட ஆவணப் பதிவாளர் முன்னிலையில், என் வாழ்க்கைத் துணைவியாக ஏற்கும் பதிவு மண விழாவுக்கும், அன்று மாலை 5 மணிக்கு நடைபெறும் சிதம்பரம் இசைவாணர் சி.எஸ். ஜெயராம் அவர்களின் இன்னிசைக்கும் வந்திருந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்போடு அழைக்கிறேன். தயவுசெய்து இதனையே அழைப்பு மடலாகக் கருத வேண்டுகிறேன்.

காஞ்சிபுரம்.
1—9—54.

**அரங்கண்ணல்**
துணை ஆசிரியர்
"திராவிட நாடு"

# காலம் கூறும் ஜனநாயகம்

மனிதனின் காலம், இந்த மாநிலம் மண்ணாகி, கல்லாகி, பலநூறு ஆண்டுகள் கழிந்த பின்னர் தான் தொடங்கியது என்று வரலாற்று வல்லுனர்கள் கூறுகிறார்கள், அதற்கு முந்திய பூமண்டலம் பூராவும் சூன்யமாயிருந்ததென்றும், அது தான் வரலாற்றுச் சுவடியின் முதற்படியென்றும் அதே சரிதப் பேராசிரியர்களால்தான் சொல்லப்படுகிறது.

மனிதன் தோன்றி, தனக்கிருக்கும் பகுத்தறிவின் பயனை அவன் உணர்ந்த நாள்வரை; அவன் மிருகத்தைப் போலத் தான் வாழ்க்கை நடத்தியிருக்கிறான்—படித்திருக்கிறோம். அப்போதெல்லாம் மனிதனுக்கு மனிதன் கூட்டுறவு இல்லை; அவனவன் சொந்த வாழ்க்கைப் போராட்டத்தை தானே நடத்திக் கொள்ளவேண்டிய அவலநிலையில் மனிதன் வாழ்ந்தான்—இதையும் நாம், படித்தவர்கள் சொல்ல கேள்விப்பட்டிருக்கிறோம். கூட்டுமுயற்சியில்லாமல் காட்டு விலங்குகளுக்கு மத்தியிலே வாழ்ந்த மனித சமுதாயத்தை ஜனநாயக உலகத்திற்கு அழைத்து வந்த பெருமை, அதற்காக மனித இனம் செலுத்தும் இதயங்கனிந்த நன்றி, காலமெனும் விஞ்ஞானியைத்தான் சாரும். ஆமாம்—காலம்—உலகத்திற்கு ஒரே நீதிமான்! கொலைகாரன், குடும்பம் கலக்கி, குடிகாரன், கூத்திக் கள்ளன் அனைவருமே அவனிடம் தண்டனை பெற்றுத்தானாக வேண்டும்.

ஜனநாயகம்! இந்தப் புனிதமான வார்த்தை குவலயத்தை ஆட்டிப் படைக்கக் கூடிய குறுகிய சொல், இன்றைய சர்வதேச அரங்கில் எத்தனையோ முறை தற்கொலை செய்து கொள்ளத் துணிந்திருக்கிறது. இன்னும் சில நாடுகளில் மணம் முடிந்தவுடன் கைவிடப்பட்ட காரிகையைப் போல கண்ணீர் குமரியாகவும் ஆகியிருக்கிறது. முதன் முதலில், கிரீசிலும் ரோமாபுரியிலும்தான் ஜனநாயகத் தத்துவத்தின் வித்துக்கள் முளைத்தன வென்பதுதான் நூல் வல்லார் கருத்து. ஆனால் இருநூறு ஆண்டு காலமாகத் தான் அந்த ஜனநாயகத்தின் வாடை உலக முழுதும் வீசத் தொடங்கியிருக்கிறது. சுயேச்சாதிகாரமும், தனிப்பட்ட சமூகத்தினரின் சர்வாதிகாரமும் அதற்கு முன்பு நிலவிவந்திருக்கிறது. படை பலமிக்கோன் பாராளு மன்னனாகி யிருக்கிறான்; பணம் படைத்தோன்பிரபுவாகக் கருதப் பட்டிருக்கிறான். மனிதன் மிருக நிலைமாறி, மனித நிலைக்கு வந்த பின்புதான் பல பாகங்களுக்கு குடியேறியிருக்க வேண்டும், இல்லாவிட்டால், காற்று மழைகளால் பாதிக்கப்படாத நைல் நதி பகுதிகளையும், உழவுக்கு சாதகமான மெசபடோமியாப் பிரதேசத்தையும் அவர்கள் குடியேறுவதற்கான இடங்களாகத் தேர்ந்தெடுத்திருக்கமுடியாதல்லவா! அதனால் தான் அந்த நிலப்பகுதிக்கு நாகரிகத்தின் தொட்டில் என்ற அடைமொழியை— புகழ் பட்டத்தை வரலாறு சூட்டியது போலும்!

அந்த நாட்களில் இயற்கையின் கொடுமைகளால் ஏற்படுகிற அழிவுகளை ஆண்டவன் கட்டளை, தெய்வீகசக்தி என்று எண்ணினான். இதை அஸ்திவாரமாகக் கொண்டுதான் வேடதாரிகள் கடவுள் பிரச்சாரம் செய்யத் தலைப் பட்டிருக்க வேண்டும். "தெய்வத்தின் கோபத்தினாலேயே, தீங்குகள் குறுக்கிடுகின்றன, அவைகளை நீக்குதவற்கு காணிக்கைகள் தந்து, பிரார்த்தனைகள் செய்து மகேஸ்வரனுக்கு சினமாற்றித்தாக் கொள்ள வேண்டும்" என்று அந்த கடவுட் பிரச்சாரகர்கள் மக்களுக்கு எடுத்தோதினர்கள்.

# ஞாலம் ஏற்கும் புதுப் பாடம்.

நாளடைவிலேயே இந்த நஞ்சுச் சாறு தெளிவில்லாத அன்றைய மனிதனின உள்ளங்களில் வேரூன்றிவிட்டது. ஒரு சில நாடுகளில், மதத்தலைமையும் அரசியல் அதிகாரமும் ஒருவனிடமே சிக்கி சீரழிந்ததற்கும் மூலகாரணம், மனித வர்க்கத்தின் தரிசு உள்ளத்தில், அந்த தந்திரக் காரர்கள் தூவிய விஷவித்துக் காரணமாகத்தானிருக்க வேண்டும்.

அதன் அறுவடை, மங்கோலியாவிலும், திபெத்திலும், புத்தரின் திருஅவதாரமென ஒருவரைத் தேர்ந்தெடுத்துக்கொண்டார்கள்.

சீனர்கள் தங்கள் சக்ரவர்த்தியை சொர்க்கலோகத்து மனிதன் என்று அழைத்துகொண்டார்கள்

ஜப்பானியர் அவர்களின் மன்னவனை தெய்வீக அரசன் என்று கூறிக்கொண்டார்கள்.

அப்போது மவுனமாக இருந்ததின் பயன்தான் சிங்காதனம் உதறித் தள்ளியபின்பும், 'சக்கரவர்த்தித் திருமகன்' எழுதும் சபலமிக்கவர்களையும் தாங்கிக் கொள்ள வேண்டியதிருக்கிறது. அன்று கலந்த விஷம் இன்னும் நீங்கியபாடில்லை.

ஒருவனே, மதத்தலைவனாகவும், அரசியல் தலைவனாகவும் இருந்ததின் விளைவால் அழிந்த சொத்துக்கள் அதிகமென்றாலும், சிந்தனை வளர்ச்சி பாதிக்கப்பட்டாலும், அந்த நிலை நீடித்திருக்கவில்லை. மதத்தலைவனிடமிருந்து அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிவிடவேண்டுமென்று போர் வீரர்களும், ஒரு சில அரசியல் வாதிகளும் புரட்சி செய்துதானிருக்கிறார்கள். அந்தக் காலம் தான், மனிதன் மிருகத்தோடு போராடும் இழிநிலை ஒழிந்து, மனிதன் மனிதனோடு போராடிய காலம்; அந்தக் காலம் தான் மனிதன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ராணுவ பலமும் ஒழுங்கான அரசியலும் தேவை என்று உணர்ந்த காலம்; மனிதன் விரிந்து கிடக்கும் உலகத்தை விசாலக் கண் கொண்டு பார்த்த காலமும் அந்தக் காலம்தான். அப்போதுதான் மனிதன், குருதிக் குளங்களையும், குட்டிச் சுவரான குடும்பங்களையும் பார்க்க முடிந்தது. அந்தச் சோகச் சித்திரங்கள் மனிதனின் இதயத்தில் சிந்தனைச் சூறாவளியை வீசச் செய்தன. மனிதன்மணி முடிகளை மண்ணிலே உருளச் செய்தான். சிங்காதனங்கள் சதுரங்கப் பலகைகளாகின.

கிராம் வெல்லின் தலைமையிலே இங்கிலாந்தில் பெரும் புரட்சி! வேந்தன் சார்லஸ் வெட்டுப் பாறையில் ஏற்றப்பட்டான். இங்கிலாந்தைச் சேர்ந்த குடியேற்ற நாடுகள் குடியரசு நாடுகளாகி தனிக் கொடி பறக்க விட்ட புரட்சி நூற்றாண்டு அது!

சுதந்திரத்திற்குப் போராடிய மனிதன் — சமத்துவத்திற்குப் போராடினான். சமத்துவமில்லாத சுதந்திரம் உயிரற்ற உடல் என்பது அவன் சித்தாந்தம். போராடினான்! செந்நீரில் நீராடினான். உயர் பதவிகளிலிருந்தோர் உருண்டு விழுந்தார்கள் — பரம்பரை பாத்தியதை என்ற விஷ விருட்சம் வேரோடு சாய்ந்தது. உழவன் மகன் உழவன்தான், தொழிலாளி மகன் தொழிலாளி தான், மிட்டா மிராசுகளுக்குத் தான் ஓட்டு உரிமை உண்டு என்ற இழிநிலை குடைகவிழ்ந்தது. அதன்பிறகு தான் மனிதன் தன்னை ஆளும் அரசாங்கத்தோடு போராடும் காலத்தை பிடிக்க முடிந்தது, நீதிக்கும், அநீதிக்கும் போர் நிகழ்ந்த அந்தக் காலத்தில்தான், நன்மைக்கும், தீமைக்கும் போர் நிகழ்ந்த அந்தக் காலத்தில்தான் காங்கிரசார் வெள்ளையரோடு போராடினார்கள். "வேற்றவர் நீங்கள் — வெளியேறுவீர் பரங்கியரே"! என்று விடுதலை பேரிகையைத் தட்டினார்கள்.

ஆனால் இந்தக் காலத்தைத்தான் உண்மையான ஜனநாயகத்தின் நோக்குகளை தன்னகத்தே பெற்றிருக்கும் காலமென்று சொல்ல வேண்டும் - காரணம், சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வை, சட்டத்தின் துணை கொண்டு சரிப்படுத்த முடியாது என்று பேசத் தலைப்பட்டதும், தனக்கென் ஒருதனிப் பண்பும், கலாச்சாரமும் உள்ள சிங்காரநாடுகள் தனியாட்சி கோருவதும். தாய்மொழி ஆட்சிமொழி யாகவேண்டும், காலனி ஆதிக்கங்கள் அடியோடு ஒழிய வேண்டும் என்று வற்புறுத்துவதும் இப்போதுதான் இந்த இருபதாம் நூற்றாண்டின் முதுமைப் பருவத்தில்தான் செத்துமடிந்த சிந்தனைச் சிற்பிகள் கனவுகண்ட ஜனநாயகத்தின் கோட்டைவாயில் திறக்கப் பட்டிருக்கிறது. ஆனால் ஒரு முட்டாள், தன் சொந்த செல்வாக்கையும், இன்ன பிற வசதிகளையும் கொண்டு மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டால் அது ஜனநாயக மாகாது என்று சொல்லக் கூடிய காலம் வந்தாலும் நாம் வியப்புறு வதற்கில்லை—காலம் எப்படித் திரும்புகிறதோ! ஞாலம் அதற்கு எப்படி இசைந்து கொடுக்கிறதோ!

ஓட்டுச் சீட்டுகள் இப்போதெல்லாம் நாகரீகத்தின் அளவுகோலாகிவிட்டன. கட்சி அரசியல் மூலம் கண்யமான ஆட்சியை முதன் முதலாக நடத்திக் காட்டிய பெருமை இங்கிலாந்தைத் தான் சேரும். இருந்தும் ஓட்டர்களை ஆட்டுமந்தையாக நினைத்து ஒரே கட்சியின் நிரந்தர சர்வாதிகாரத்தை செலுத்த நினைக்கும் அரசியல் வாதிகள் இன்றும் இருக்கிறார்கள்-உலகெங்கும் நிறைந்து கிடக்கிறார்கள். ஓட்டர்கள் கல்வி அறிவு பெறாதவர்களாக இருந்தால் தான் சட்டசபை ஒரே கட்சியின் சர்வாதிகார சபா மண்டபமாக இருக்கும். இதனால்தான் நம் நாட்டுத் தேசீயத் திருவாளர்கள் கல்வித் திட்டதோடு சதா சர்வ காலமும் விளையாடிக் கொண்டே இருக்கிறார்கள் போலும்!

# தலையங்கம்

சென்னை [ 3—9—54 ] வெள்ளி

## செங்கதிர் எழுந்தது!

சேவல் கூவுகிறது தென்னுற்காடு மாவட்டத்திலே; செங்கதிரோன் எழப்போகும் அறிகுறி இதுவென நாம் மகிழ்ந்திருந்தோம். கோழிப் பெட்டியுடன், உழைப்பாளர் கட்சி, மாட்டுப் பெட்டிக்காரர்களை எதிர்த்த நேரத்திலேதான் அவ்வண்ணம் நினைத்தோம். சேவலை வாழ்த்தினேம். செங்கதிர் உதயமாகப் போவது தெரிந்து மகிழ்ந்தோம்.

ஆனல்—கூவிக்கொண்டிருந்த சேவலின் குரல்வளை திடீரென நெறிக்கப்பட்டு விட்டது. திடுக்கிட்டோம்! சேவலின் முழக்கம் நின்று விட்டது. கவலைதான் நமக்கு! ஏமாற்றமும்கூட! சேவலின் கழுத்தை முறித்த சீமான்களின் செயல், எரியும் தீயில் எண்ணெய் ஊற்றியது போலிருந்தது.

சேவல் முழக்கம் நின்று விட்டதே, எதிர்பார்த்தபடி செங்கதிர் எழாமல் போய்விடுமோ-என்று உலகத்தில் யாராவதுஓரிருவர் கவலைப் படுவார்கள்!

அதுபோலவேதான் ஒருசிலர் தென்னுற்காடு மாவட்டத்திலும் கவலையை அணைத்துக் கொண்டார்கள்!

ஆனல்—சேவல் கொல்லப்பட்டும்கூட, வழக்கம் போல செங் கதிரோன் எழுந்துதான் விட்டது!

சூரியன் சின்னத்தை தன் அடையாளமாகப் பொறித்துக் கொண்டு **உழவர் கட்சி** உதயமாகியிருக்கிறது. தென்னுற்காடு மாவட்டத்திலே திராவிடப்பண்பு கொண்டோர் ஏராளம் இருக்கிறுர்கள், நம்பிக்கைத் துரோகிகளுக்கு இடையிலேயும்கூட; அந்த நல்லவர்கள்—மக்கள் மத்தியிலே உலவும் உத்தமர்கள்—வாக்குறுதியை தன் தாயினும் மேலாகக் காப்பாற்றுவோர்—சொன்ன சொல்லை, இன்னல்கள் பல ஏற்றிடினும் மாற்றிடும் குணமில்லாதவர்-கூடி நின்று அமைத்திருப்பதுதான் உழவர் கட்சி. கோழிக் கொடியின் கீழே, கூடி நின்ற மக்கள் பெருந்திரளை துச்சமெனத் தள்ளிவிட்டு **ரிஷப வாகன** சவாரி செய்யப் போய்விட்ட பதவி ஆசைக்காரர்களுக்கு, உழவர் கட்சியின் தோற்றம் பேரிடியாகத்தானிருக்கும்!

ஆனல், மக்கள் மன்றம் இந்த நல்ல செய்தியை மனப்பூர்வமாக வரவேற்றிருக்கிறது.

வரும் ஜில்லா போர்டு தேர்தல்களிலே உழைப்பாளர் கட்சியினர், தங்கள் கோழிச் சின்னத்தை அகற்றிவிட்டு, காங்கிரசின் காளைச் சின்னத்தை தூக்கிக் கொண்டு போட்டியிடுகின்றனர். உழவர் கட்சி—அந்த திடீர்க் காங்கிரஸ்காரர்களை எதிர்த்து நிற்க முடிவு செய்திருக்கிறது!

அதுபற்றி, நமது அண்ணு அவர்கள் திருவெண்ணெய் நல்லூர் பொதுக் கூட்டத்தில் வெளியிட்ட கருத்துக்களை கீழே தந்திருக்கிறேம்.

"கடந்த பொதுத் தேர்தலில், கோயங்கா போன்ற பெரும் பண முதலைகளை எதிர்த்து வெற்றி பெற்ற கோழிச் சின்னமுள்ள பெட்டிகள் வருகிற ஜில்லா போர்டு தேர்தலில் இருக்காது! மாருக, அத்தனையும் மாட்டுப் பெட்டிகளாக மாற்றப்பட்டு விட்டன—கனம் ராமசாமி படையாச்சியாரால்!

"உழைப்பாளர் கட்சியினரின் போக்கால் நாங்கள் ஏமாற்றப் பட்டோம்! எங்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றம்கூடப் பெரிதல்ல; ஏனெனில் அரசியல் வாழ்விலே அத்தகைய ஏமாற்றங்கள் பலவற்றை நாங்கள் சந்தித்துவிட்டிருக்கிறேம்!

"ஆனல், ஒரு பெரும் சமுகத்திற்கு நேர்ந்த ஏமாற்றம்தான் மிகப் பெரியது. அந்த மக்கள் உண்மையிலேயே ஏமாற்றப்பட்டுவிட்டார்கள்.

"அந்த ஏமாற்றத்தின் காரணமாக மனம் உடைந்த தோழர் கோவிந்தசாமி போன்றவர்கள், புதியதொரு கட்சியை, **உழவர் கட்சி** என்ற பெயரில் இந்த தென் ஆற்காடு மாவட்டத்தில் துவக்கி உள்ளனர்.

"அவர்கள் வருகிற ஜில்லா போர்டு தேர்தலில் போட்டியிடுகிறுர்கள். அந்தக் கட்சி நிறுத்தியுள்ள அபேட்சகர்களை இந்த மாவட்டத்தில் உள்ள தி. மு. கழகத்தவர் ஆதரிப்பார்கள்."

தென்னுற்காடு மாவட்டத்தில் மட்டுமல்ல; தமிழகமெங்கும் இத்தகைய துரோக உள்ளத்தினரை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்த வேண்டியது மக்களின் கடமையாகும். காங்கிரஸ் தோழர்களைவிட, காங்கிரசிலே இப்போது கலந்து கொள்ளும் துரோகிகள் கொடியவர்கள். முதலில் அழிக்கப்படவேண்டியது ராமன்கூட அல்ல, விபீஷணன்தான் என்று நாம் பலமுறை சொல்லி வந்திருக்கிறேம்;

அத்தகைய ஒரு நல்ல வாய்ப்பு மக்களுக்கு கிடைத்திருக்கிறது. இந்த வாய்ப்பைக் கெடுத்துவிட—பதவி பீடத்து உருட்டல் மிரட்டலும், பண ஓசையும்—படை வரிசையும்—கிளம்பலாம்! கிளம்பும்! மக்கள் சக்தியின் முன்னே—ஜனநாயக தத்துவத்தின் முன்னே—அந்த எதிர்ப்புகள் தூளாகித்தான்தீர வேண்டும்!

சேவல் கூவும்போதே சாக அடிக்கப்பட்டது! செங்கதிர் எழுந்தது! உழவர் படை உழைப்பு நோக்கிப் புறப்பட்டுவிட்டது!

இப்படை வென்றிட அனைவரும் ஒத்துழைப்பு தந்திட வேண்டுகிறேம். வாழ்க, உழவர் கட்சி!

## இன்னும் எத்தனை நாளோ?

*முடிநெடுவேந்தர் மூவரின் வழிவந்த மறக்குடிமகிபர்கள் போரிலே புறமுதுகிட்டால் வடக்கிருந்து உணவருந்தாமல் உயிர் விடுவராம். அந்த வீரமரபு புறநானூற்றுக் காலத்தோடு முடிவு பெற்றது. இன்னும்தான் நாவலந் தீவினர் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வடக்கிருக்கின்றனர். காய்ச்சிய மழுவாக நேருவின் சொற்கள் நம் மீது சீறி வந்த போதும், குடல் நிரப்பும் கூழுக்கும், குடித்தனம் நடத்துவதற்கும் தென்னகத்து தீரர்கள்—தென்னவன் வழிவந்தோர்—வடக்கைத்தான் எதிர்பார்த்து நிற்கிறுர்கள்.*

*நான்மாடக் கூடங்களில் ஏற்றி வைத்த தீபச்சுடருக்கும், கலங்கரை விளக்கத்திற்கும் வித்தியாசம் தெரியாது கடலிலே நீச்சலடித்தனர், நாவலந்தீவினர். அது தென்னகம் செல்வக் கடலாடிக்கொண்டிருந்த பொன்னுன காலம். அந்தக் காலம் மறைந்து விட்டது.*

*திரைகடலோடி சிங்களத் தீவை நாடி—உழைப்பு தந்து ஊதியம் பெற்ற ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் நாதியற்றவராய் நாடு கடத்தப்படும் பரிதாபமான காலம், இது!*

*தென்னிலங்கை மட்டுமல்ல, திராவிடரை விரட்டி அடிப்பது; கண்ணிலே மணியாய் காத்து ரட்சிப்பதாக தம்பட்டம் போடும் டெல்லி பீடமும்தான் அந்த வேலையைச் செய்கிறது! இப்போதுமட்டுமல்ல அவர்கள் நம்மை துரத்துவது; கொத்தலர் பூங்கொத்தாம்,தீதறு குரவராம் தென்னகத்துப் பெருமக்களை கொத்தலவாலை இலங்கையிலே கசக்கி எறியத் துவங்குவதற்கு முன்னுலேயே, நேருவும், அவர் தம் ஏகாதிபத்தியக் கூடாரமும் நம்மவருக்கு வேட்டு வைத்து விட்டனர்.*

*முன்னர் லண்டன் மாநகரம் சென்று, ஸ்டர்லிங் பேரத்தை வெற்றிகரமாக முடித்து மீண்டார் பொருளாதார விற்பன்னர் ஆர். கே. சண்முகம். காரியம் வெற்றிகரமாக முடிந்தது; பின்னர் நேர்மையின் சிகரமாம் சண்முகனூர் செங்கோட்டையிலிருந்து வெளியேற்றப் பட்டார். அவர் தம் பாதையிலே மீண்டுமொருவர் இந்த வாரம் வெளியேறி யிருக்கிறுர். ஆமாம்; தொழில்முறை அமைச்சராக இதுகாறும் இருந்துவந்த கிரி அவர்களும் தன் பதவியிலிருந்து ராஜிநாமா செய்துவிட்டார். புதுமையான திட்டங்கள் செய்வதற்கு பல நாட்கள் முயற்சி செய்தும் அவையெல்லாம் ஈடேர வழிவகை இருப்பதாகத் தோன்றவில்லை; எனவே விலகுகிறேன் என்று அமைந்திருக்கும் அவரது கருத்து நம்மையெல்லாம் வேலெனத் தாக்குகிறது.*

*அறுபது வயது நிரம்பப்பெற்ற மூதறிஞர். அவரது வார்த்தைகள் அம்பலமேறாத காரணத்தால் விலக்கப் படுகிறுர்—நாகரிக வழக்குப்படி—அவராகவே விலகுகிறுர். இழுத்த இழுப்பிற்கு நிற்கும் ஒரு சில எடுபிடிகளை மட்டும் வைத்துக் கொண்டு திறமையின் சிகரங்களாம் தென்னுட்டு மூளைகள் வெளியேற்றப் படுகின்றன.*

*கிரிதான் விலகுகிறுர். விந்தியத்திற்கு அப்பால் வடக்கத்திய ஏகாதிபத்தியத்தின் வெறிச்செயலை மூடிநிற்கும் இரும்புத் திரை விலக இன்னும் எத்தனை நாளோ?*

# அறிக்கையால் ஆளுகிறார் அலகாபாத் வீரர்!

★

அலங்கார வேலைப்பாடுகள் மிக்க அழகான தங்கப் பாத்திரம். அது கொஞ்ச நாட்களுக்கு அடகு போக வேண்டியிருந்தது. அடகு பிடித்தவனோ, ஒரு சூழ்ச்சிக்காரன். அவன் பத்தரை மாற்றுத் தங்கத்தை சுரண்டி எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக பித்தளைப் பொடிகளை வைத்து விட்டான். அன்னியர் கையில் அகப்பட்டுக் கிடந்த இந்திய உபகண்டம் பாத்திரம் அடகுபோன கதையாகத்தான் காட்சி தந்தது. கோவையின் பஞ்சு கிளாஸ்கோ சென்ற பிறகுதான் நேர்த்தியான மஸ்லினாக இங்கு திரும்பி வரமுடிந்தது, வங்கத்தின் சணல் டப்ளின் சென்ற பிறகுதான் கோணிப்பைகளாகக் காட்சிதர முடிந்தது. அதற்கு பதிலாக பொருளாதார சீரழிவை சன்மானமாகப் பெற்றோம்.

திடீரென்று ஒரு நாள் நம்முடைய தங்கப் பாத்திரத்தை அடகுக் கடையிலிருந்து மீட்டனர். கோப்பையில் குவிந்து கிடக்கும் அழகைத் தேடினர். உதய சூரியனையும் வாகை சூடும் அந்த இதயங்கவர் ஜொலிப்பு பாத்திரத்திலே இல்லை. மாற்றுக் குறைந்து விட்டதா என்று அந்த ஆணிப்பொன் அணிகலனை உறைகல்லிலிட்டு தேய்த்தனர். கருத்துப்போன பித்தளைப் பொடிகள்தான் தரையில் விழுந்தன. கனத்துப்போன நெஞ்சத்தோடு புருவத்தை நெறித்தபடி பாத்திரத்தின் சொந்தக்காரன் மண்ணிலே; சாய்ந்தான். வட்டிக்கடை வைத்த கொள்ளைக்காரனோ தங்கப் பொடிகளோடு கம்பி நீட்டி விட்டான்.

பாத்திரத்தின் சொந்தக்காரன் திறமைமிக்கவனாயிருந்தால், உடல் வருந்தி சம்பாதித்து, தங்கம் வாங்கி வளைந்துபோன கோப்பையை உருக்கி வார்த்திருப்பான். கடமையிலே கண் வைத்திருப்பவன் அப்படித்தான் செய்திருக்க வேண்டும். வெள்ளையனிடமிருந்து இந்நாட்டைத் திரும்பப் பெற்ற நம் தேசியத் திருவாளரோ சிதைந்துபோன பாத்திரத்தை உருக்கி வார்க்கவில்லை. வெள்ளிப்பொடி வைத்து ஊதி, இருப்புக்கம்பி கொடுத்து நிமிர்த்து பாத்திரத்தைப் பழுது பார்க்க நினைக்கிறார்கள். அதன் விளைவாகத்தான் இந்த உபகண்டம் பொருளாதாரத் துறையில் இன்னும் விழிப்பு பெற்ற பாடில்லை. அரசியல் துறையில் இன்னும் வெள்ளையன் கடைப்பிடித்த காட்டுமிராண்டி வழியில்தான் நாம் இழுத்துச் செல்லப்படுகிறோம். சோவியத் ரஷ்யாவிலும், சீனாவிலும் நசுங்கிப்போன பாத்திரத்தை உருக்கி வார்த்து விட்டார்கள்—இங்கோ பொறுக்குத் தட்டிப்போன பகுதிகளெல்லாம் மெழுகிட்டு மறைக்கப்படுகின்றன. புரையோடிப்போன புண்ணையும் பூசி மறைக்கும் இந்நாட்டு தேசியத் திருவாளர்களின் வேலைக்கு—அவர்களின் தலைவராம் நேருப் பண்டிதரின் அன்றாட அறிக்கைகளே சான்று தரும்.

சென்ற வாரம் அவர் பிரதேச காங்கிரஸ் கமிட்டிக்கு கீழ்க் கண்டவாறு கடிதம் அனுப்பியுள்ளார்:

"ஜனநாயக அரசாங்கத்தின் அடிப்படையே அமைதியான வாழ்க்கைதான். எந்தவித சிக்கலான பிரச்சினைகளும் கூட்டுணர்ச்சி கொண்ட பேச்சு வார்த்தைகளாலும், ஒப்பந்தங்களாலும், நட்புறவு கொண்ட வற்புறுத்தலாலுமே தீர்த்துக் கொள்ளலாம். ஜனநாயத்தின் இந்த மூல தத்துவம் கடைப்பிடிக்கப் படாவிட்டால் ஜனநாயகமே சரிவர இயங்காது."

வாசகங்கள் புதுமையைத்தான் கக்குகின்றன. அறிக்கை அளவோடு அந்த புதுமையும், பொலிவும் நின்று விடுகிறதே என்று நினைக்கும் போதுதான் நம் நெஞ்சு நெகிழ்கிறது. பேச்சு வார்த்தைகளாலும், நட்புறவு கொண்ட வற்புறுத்தலாலுமே எந்தப் பிரச்சினைக்கும் முடிவு கண்டு விடலாமாம்: திவ்யமான யோசனைதான் இது.

அன்னியன் ஆட்சியில்தான் சர்க்காரின் மாளிகை சாமான்யர்கள் நுழைய முடியாத சொர்க்க வாசலாக இருந்தது. சர்க்காரும், ஜரிகைக் குல்லாய்களும்தான் அங்கே சரசமாடிக் கிடந்தன.

இப்போது நடப்பது சுதந்தர சர்க்கார் — ஏழைக் குடியானவனும், ஏழாயிரம் ஏக்கர் வைத்திருக்கும் எஸ்டேட் முதலாளியும் ஒரே நோக்கோடு வரவேற்கப் படவேண்டும், அரசுகட்டிலேறிகள் ..ம் அருகிலேதான் இருக்கிறார்கள் என்கிற நினைப்பைப் பரவ வைப்பதற்குத்தான் நேருவின் அறிக்கை முயன்றிருக்கிறது. முயற்சி பாராட்டுக்குரியதுதான். ஆனால், அத்தரும், அரகஜாவும் அழுகிப்போன பிணத்தை மறைக்கப் பயன் பட்டால், அந்த விவேகமற்ற செயல் வன்மையோடு கண்டிக்கப் பட வேண்டும்.

தோழமை கொண்ட பேச்சு வார்த்தைகளாலேயே சுமுகமான முடிவுக்கு வரமுடியுமெனக் கருதும் பண்டிதர், நினைத்திருந்தால் திரு. கொச்சியில் களம் அமைத்துப் போராடும் மக்களின் பிரதிநிதிகளை நேரில் சந்தித்து, நேர்மை எது என்பது குறித்து சிந்தித்திருக்கலாம். ஜனநாயகராகத்தின் சுருதி சத்யாக்ரகம் என்னும் அபசுரத்தால் குலைந்து விட்டதாகக் கருதும் மோதிலால் மைந்தர், ஆனந்த பவனத்தை விட்டு திரு. கொச்சிப் பகுதியிலே தலைகாட்டியிருந்தால் — தாணுப் பிள்ளையின் கோணல் ஆட்சியைப்பற்றி விசாரணை நடத்தியிருந்தால்-அங்கே இப்போது அராஜகம் ஆட்சி செலுத்திக் கொண்டிருக்காது; நாயை அடிக்கும் குறுந்தடிகளெல்லாம் மக்களை பயமுறுத்தும் செங்கோலாகக் காட்சிதராது. கொடுங்கோலன் என்று குற்றம் சாட்டப்பட்ட வெள்ளையன் கூட வட்டமேஜை மாநாடு கூட்டி, ஜனநாயகத்தின் பெருமையை அன்றே எடுத்துக் காட்டி இருக்கிறான். அந்தக் கொள்ளைக்காரர்களையும் நல்வர்களாக்கி விட்டார்கள், கதர் வாலாக்கள். அறிக்கை விடுவதால்மட்டும் நாட்டு மக்களின் தவிப்பு அடங்கிவிடாது. வா 'என்று அழைப்பு விடுத்த பின்னர் நெருங்க முடியாத நெருப்பாகக் காட்சி தருவது தேசியத்தார்கள் செய்யும் கொடுமையினும் கொடியதாகும்,

●

## புனுகுச் சிமிழ்

★

முத்தொள்ளாயிரம், தென்னகத்து மன்னவரின் கீர்த்தி பாடி, அன்னவரின் சித்தம் கூறி, திராவிடத்தின் வீரக்காதை செப்பும் வெற்றிக் கலசத்தின் நூல் வடிவம்! வேல் கொண்டு எழுதப்பட்ட வைரப் பட்டயம்! முடியுடை வேந்தர் மூவரின் புகழ் மணம் பரப்பும் புனுகுச் சிமிழ்! அப்பப்பா! பிற நாட்டு வேந்தர்களின் பெருமை சொல்லும் வேற்று மொழி இலக்கியங்கள் தமிழகத்து இலக்கியங்களின் முன்னே கதிர் கண்ட நிலவுதான் போலும்! பாண்டிய மாறனின் வீரத்தை அவன் தன் புரவிகளின் வாயிலாக விளக்குகிறார் கவிஞர் பாருங்கள்! களத்திலே படைகள் மோதின. பாண்டியன் குதிரைகளின் நரம்புகள் முறுக்குப் பெற்று மாற்றாரின் யானைப் படையை திக்கு முக்காடச் செய்கின்றன. யானைகளின் கழுத்துக் கயிறுகள் அறுந்து பஞ்சு, பஞ்சாக பறக்கின்றன. அந்தக் கயிறுகளினடியில் காலை நுழைத்துக் கொண்டிருந்த அரசர்கள் கீழே உருண்டு விழுகிறார்கள், பாண்டியன் வாகை சூடுகிறான். வெற்றிக்கு வழி கோரிய அந்தப் புரவிப்படை கம்பீரத்தோடு தலை நிமிர்த்தி ராஜகோட்டைக்குள் நுழைகிறது. அப்போது குதிரைகளின் குளம்புகளில் பொன் முலாம் பூசியது போலிருக்கின்றது. அதற்கு கவிஞர் கூறும் காரணம் என்ன தெரியுமா? களத்திலே உருண்ட வேற்று மன்னர்களின் மணி முடிகளை குதிரைகளின் குளம்புகள் உதைத்ததினால் குளம்புகளில் பொன்னிறம் ஏறிற்று என்கிறார். பாண்டியப் புரவலனின் மகிமை கூறும் அந்த புலவனின் வாய் மொழி இதோ:—

நிரை கதிர்வேல் மாறனை நேர் நின்றார் யானைப்
புரசையற நிமிர்ந்து போங்கா—அரசர் தம்
முன் முன்னா வீழ்ந்த முடிக ளுதைத்த மாப்
பொன்னுரைகற் போன்ற குளம்பு.

# வௌவால் அடைகிறது!

"மூறு காறு"

அழகான மண்டபம். ஆயிரக் கால் மண்டபம். சிற்பி களின் கைத் திறமை அத்தனை யும் பெற்றுத் திகழும் மண்டபம். ஓவியப் பூஞ்சோலை இது தானே- காவியத்தின் பிறப்பிடமும் இங்கு தானே; என ஐயுறும் வண்ணம் அமைந்த கலைப்படைப்புகள். வீரர்கள் வேந்தனல் கிளப்பும் விழியை எப்படித்தான் தீட்டி னரோ? யாழ் மீட்டும் பாவை விடுதலை விருத்தம்தான் பாடுகிருள் என்பதை ஊமை ஓவியத்தில் காட்டிவிடும் திறமையை அந்தச் சிற்பி யாரிடம்தான் கற்ருனே?

ஆவேசக் குரல் எழுப்பி 'வெளி நாட்டானே வெளியேறு' என்று அந்தக் குமரன் கர்ச்சிப்பதை ஒலியால் அல்ல; தூரிகையின் அசைவினுலேகாட்டிவிட்டஓவிய னுக்கு நிகர் யாருளர்? புற நானூற்றுத்தாய் எப்படியிருந்திருப் பாள் என்பதை ஆடையாலோ— அணி மணிகளாலோ அறிவிக்கா மல், தில்லையாடிவள்ளியம்மாளின் முகத்தின் மூலமே அறிவித்து விட்ட அந்தக் கலையுலகக் காவ லன் யாரோ? செக்கிழுப்பதிலே ஏற்படும் சப்தத்தைக் கேட்க முடியவில்லை—ஆனுல், "செக் கிழுப்பேன்—சிறை செல்வேன்- செந்தமிழுக்கு உழைப்பேன்-செங் குருதி சிந்தி சுதந்திரக் கொடியை வளர்ப்பேன்" என்ற சூளுரையை அந்த சிதம்பரனுரின் இதழோரத் தில் கிளம்பும் அமைதி நவழ் புன்னகையின் வாயிலாகவே காட்டி விட்டவனின் கைத் திறமைக்கு பரிசளிக்கும் தகுதி யுடையோர் யார்? ஒருவருமில்லை. தூக்குக் கயிறுகள் தெரிகின்றன. வேறு எதுவுமில்லை—ஆனுலும் அந்தக் கயிற்றிலேதான் கட்ட பொம்மனின் கழுத்து இறுக்கப் பட்டு உயிர் நொறுக்கப்பட்டது என்ற பழைய காட்சியை மனக் கண்முன் கொண்டுவரும்சித்திரக் காரன் எத்திக்கும் புகழப்பட வேண்டியவன் அன்ருே? ஆர்வம் —துடிப்பு—எழுச்சி—உணர்ச்சி- வெறி—பழி வாங்கும் எண்ணம்- லட்சிய தாகம்—எல்லாவற்றை யும் துப்பாக்கியைப் பிடித்திருக் கும் அந்த வீரக் கரத்தின் மூல மாகவே விளக்கி, பகவத் சிங்கை காட்டாமல் விட்டுவிட்ட அந்த உயர்வு இருக்கிறதே—அது யாரா லும் செய்ய முடியாதது! உன்னத மான கலைச் சித்திரம்! உள்ளங் கவர் ஓவியம்—ஆவேச பகவத் சிங்கின் கரத்திலே துப்பாக்கி— அதன் எதிரே ஒரு சிறு தடிக் கம்பு--நாலு முழ வேட்டி—ஒரு தக்ளி—இவைகளை மட்டும் தீட்டி—அமைதி யூட்டிய உத்தம ரின் உருவத்தை நம் எதிரே நிறுத்தும் சைத்ரீகன் அந்த ஆயிரக் கால் மண்டபத்துக்கு கண் திறந்து விட்டான் என்றே துணிந்து கூறலாம்.

இப்படியெல்லாம் ஆயிரக்கால் மண்டபத்தைப் பற்றி மக்கள் பெருமையோடு பேசினுர்கள். அந்த மணடபத்தை பார்த்து திரும்புவதே பெறற் கரிய பேறு என பாராட்டிக் கொண்டனர்.

எழில் உமிழும் கலைக்கோட்ட மாக-உணர்ச்சி படைக்கும் உயர் மண்டபமாக—உலகத்தின் விடுதலைக் கூறையாக திகழந்த அந்த ஆயிரக் கால் மண்டபந் தான், அதோ பாழடைந்து கிடக்கிறது, இலையும் தழையும் அதன் எழிலை மறைத்துவிட் டன. மரங்களின் வேர்களும் செடிகளின்—வேர்களும்— மண்டபத்தில் சுவர்களிலே தங் கள் கைகளை அழுத்தமாக ஊன் றிக்கொண்டு கற்களைப் பெயர்த் தெறிய துவங்கிவிட்டன. சில பகுதிகள் இடிந்தேவிட்டன. அய்யகோ—அந்த எழுச்சி நிறை ஓவியங்களும்—சிற்பங் களும் என்ன ஆயின? அடடா! வீரப்பெண் வள்ளியம்மாளின் கண்களை எவனே குத்திவிட் டான்—அந்த சித்திரத்தின் கண் களிலே மண்டபத்தின் ஓட்டை வழியாகச் சொட்டும் மழை நீர் வழிவது, வள்ளியம்மாளே கண ணீர் விடுவது போலிருக்கிறது. செக்கிழுக்கும் சிதம்பரத்தின் ஓவியத்தையே காண முடிய வில்லை—பத்து லட்ச ரூபாய் 'செக்'கை இழுக்கும் ஒரு வட நாட்டு மனிதரின் உருவம்தான் பிரகாசமாகத் தெரிகிறது, அப் படி மாறிவிட்டது சிதம்பரனுரின் சித்திரம்; மண்டபம் கவனிப்பா ரற்றுப் போனதால்!

யாரோ மண்டபத்தில் நுழைந்த விஷமக்காரன்— அன் பின் சின்னமாக சித்தரிக்கப் பட் டிருந்த அழகான ஒரு கைத்தடி யைப் பிடித்திருந்த உலக உத்த மரின் உருவத்தை அழித்து விட்டு, ஒரு போலீஸ் காரரின் கையை அந்தக் கைத்தடியோடு இணைத்திருந்தான் —கவனிப்பற்ற மண்டபந்தானே: யார் வேண் டுமோ; தங்கள் கைத்திறனைக் காட்டலாமல்லவா?

கலை, கொலை செய்யப்பட்டு விட்டது — அந்த சவினுறு மாடத்தில்!

ஆயிரக்கால் மண்டபம் ஆ[illegible]ர வற்ற மண்டபமாகிவிட்டது. பார்ப்போர் மனம்கொள்ளை கொள்ளும் மண்டபம்—பாழ டைந்த மண்டபமாகிவிட்டது.

பாழடைந்த மண்டபம் வௌ வால்களைவாவென்று அழைக்கத் தேவையில்லையே! வௌவால்கள் படையெடுப்பு ஆரம்பமாகி விட்டது!

பழுத்த மரத்தை பாழ்படுத் தவும், பாழடைந்த இடத்தில் வாழ்க்கை நடத்தவும் பயிற்சி பெற்றவைதானே வௌவால் கள். இதோ அந்த வௌவால் களில் சிலவற்றைப் பாருங்கள்!

இருட்டில் ஒளிந்து கொண்டு உருட்டி விழித்து வாழும் அந்த உருவங்களின் பட்டியலைப் பாருங்கள்!

பாழடைந்த மண்டபம்—அங் கே பதுங்கிக் கொள்ள பறந் திடும் வௌவால்கள்—அந்தோ பரிதாபம்! அவலம்! அவலம்!!

ஃ ஃ ஃ

விடுதலை இயக்கமாகப் பணி யாற்றிய காங்கிரஸ் அகிலம் புகழ் ஆயிரக்கால் மண்டபமாக இருந் தது! கவனிப்பாரற்றுவிட்டதால் கல் உதிர-கலையழகும் சேர்ந்து உதிர—மாடு நுழையும் மண்டப மாக மாறியது!-இன்ருே; வௌ வால்களை வரவேற்கும் பாழ் மாளிகையாக காட்சி தருகிறது.

அதற்கு உதாரணம்தான்; செத்த பிணம் என ஆகிவிட்ட சென்னை காங்கிரசிலே மாணிக்க வேலர்-ஆம், அந்த நாள் ஜஸ்டிஸ் கட்சியின் பிரபலஸ்தர்-மந்திரி பதவி வகித்தது!

அடுத்த படையெடுப்பு — கோழிப் பெட்டிக் கோமான்— உழைப்பாளர் கட்சிச் சீமான்— காங்கிரசை எதிர்த்து மக்களின் வாக்குகளை கொட்டிக் கொண்ட வர் — ராமசாமி படையாச்சியார்- அவரும் காங்கிரசிலே கலந்து விட்டார், பெட்டியை மாற்றிக் கொண்டு — வன்னிய மக்களை ஏமாற்றி விட்டார். அந்தப் பாழ் மண்டபத்திலே ஊஞ்சலாடப் போய்விட்டார்.

பழைய கோட்டைப் பெரு நிலக்கிழார், காங்கிரசின் பகை வர்—திராவிடச் சிங்கமாம் அர்ச் சுனனின் தமையனுர் நல்லசேனு பதி—அவரும் காங்கிரஸ் மண்ட பத்திலே புது மோகத்துடன் நுழைந்து விட்டார். இப்படிப் பலர்!

அடுத்த காண்டம்-அழிவுக் காண்டத்தின் கதாநாயகனுக— ஐக்கிய முன்னணியின் அழுத்த மான பிரமுகர் —காங்கிரசை கடுமையாக எதிர்த்தவர்-காங் கிரஸ் எதிரிகளால் கைதூக்கி விடப்பட்டவர்-ராஜா சிதம்பரம் என்னும் பெரிய மனிதர் காங்கிர சிலே "ஐக்ய" மாகிவிட்டார். "ஜில்லாபோர்டு தேர்தலில் காங் கிரஸ் அபேட்சகராக நிற்க நான் முடிவு செய்திருக்கிறேன். நாட் டின் நன்மையை உத்தேசித்தே நான் காங்கிரசில் சேருகிறேன்" என்பதாக அறிக்கையும் விடுத்தி ருக்கிருர்—இந்த "அரிச்சந்திரர்" — பாவம்!

நாட்டின் நன்மையை உத்தே சித்து சேருகிருராம்! பச்சைப் பொய்! பச்சைப்பொய்! பாழ் மண்டபத்துக்குப் போக வேண்டுமென்ற இச்சை மேலிட் டுப் பேசும் பச்சைப் பொய்!

இவர்களெல்லாம் வாக்குறு தியைக் காற்றில் பறக்க விட்டு அங்கே போகிருர்களே; என்ப தல்ல நமக்கு சிரிப்பு வரும் செய்தி-- இந்த வௌவால் பண் பினரை அணைத்துக் கொள்ளும் இருட்டுமாளிகை ஆகிவிட்டதே காங்கிரஸ் மண்டபம் என்பது தான் நமக்கு சிரிப்பூட்டும் செய்தி! உண்மையான காங்கி ரஸ் வீரர்களுக்கு கண்ணீர் வழி யச்செய்யும் செய்தி!

எப்படியோ— மக்களுக்கு ஒரு உண்மை புரிந்து விட்டது!

காங்கிரசின் எதிர்ப்பு முன் னணிகள் என்ற பழுத்த மரங்க ளிலே உணவைத்தேடி வயிற்றை உப்ப வைத்துக் கொண்டு, காங் கிரஸ் பாழ் மண்டபத்திலே தொங்கிஊஞ்சலாட இந்த வௌ வால் பட்டாளம் பறந்து செல் கிறது என்ற உண்மையை இனி யாரும் மறுக்க முடியாது!

மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று அழைப்பதில்லை— நாம்—காங்கிரஸ் எதிர்ப்பாள ராகிய நாம் — அழைக்காமலே இந்த வௌவால்கள் வந்தார்கள்!

மண்டபம் இடிந்து கிடக்கி றது! மரத்திடம் சொல்லாமலே நம்மிடம் தெரிவிக்காமலே வௌவால்கள் மண்டபத்தை நோக்கிப் பறக்கின்றன — பறக் கட்டும்! பறக்கட்டும் வௌவால் கள்! அடையும் மண்டபம் அதிக நாள் மண்டபம் என்ற பெயரிலே இருக்கப் போவதில்லை. "இந்தக் குட்டிச்சுவர் ஒரு காலத்தில் அழகு மண்டபமாக இருந்த தப்பா" என்று எதிர்காலத்தவர் பேசிக் கொள்கிற அளவுக்கு திடீரென ஒருநாள் பாழ் மண்ட பம் சரிந்து விழத்தான் போகிறது. சரியும் ஓசை கேட்டதும் வௌவால் கள் குபுகுபுவென வெளியே அலறி அடித்துப் பறந்துவிடும்- போக்கிடமற்று புலம்பித்தவிக்க வேண்டிய பரிதாப நிலைமை இந்த அரசியல் வௌவால் களுக்கு வரத்தான் போகிறது. நம் கண்ணுல் பார்க்கத்தான் போகிருேம்.

*



# கள்ளத்தோணி

## 3

அடித்தளத்திலிருந்து வந்த அபயக்குரல் பரிமளத்தினுடையது என்பதை உணர்ந்த துரை மிகவும் நடுங்கிப் போனான். எதைப் பற்றியும் கவலைப்படாமல் தன் மீது கொண்ட தணியாத காதலால் பரிமளம் அந்த இரவில் தன்னை சந்தித்து--இவ்வளவு இடையூறுக்கும் ஆளாகி விட்டாளே; அதற்கு நாமும் காரணமாகி விட்டோமே-என்ற கவலையும் ஒருக்கணம் மின்னி மறைந்தது துரையின் நெஞ்சத்தில்! ஆனாலும் சமாளித்துக் கொண்டு, கீழ்நோக்கி இறங்கினான்.

ஒரு உப்பரிகையின் படிகளை அவன் கடப்பதற்குள்ளாகவே இன்னொரு சப்தம் "அத்தான்" என்றுஅவன் எதிரேகேட்டது. அவள் அவனிடம் ஓடிவந்து கொண்டிருந்தாள்,

"என்ன பரிமளம்?" என்று நடுங்கும் தோனியில் கேட்டான் துரை.

"அந்த முரடர்களைப் போல வேயிருக்கிறது -பின்தொடருகிறார்கள்" என்று அவள் சொல்லி வாய் மூடுவதற்குள் உப்பரிகையின் மேல் பகுதியிலிருந்து துரையின் தலையில் ஒரு அடி பலமாக விழுந்தது, ஆம்; அந்தக் கிழவர் தான் தன் பலங்கொண்ட மட்டும் ஒரு கட்டையால் துரையைத்தாக்கி விட்டார். திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியில் துரை மூர்ச்சையடைந்தான். துரையின் மீது பரிமளம் பாய்ந்து வாரி அணைத்துக் கொண்டாள். "அத்தான்" என்று இப்போது அவள்கூறிய போது அடடா! அந்த முறைச் சொல்லிலே தான் எவ்வளவு ஜீவன் இருந்தது. அழகான பெண்களின் சோக மயமான முகம் ஒரு புதிய பொலிவோடு விளங்கும். அந்தப் பொலிவுப் பதுமையாள் சிந்தும் சோகச் சொல்லிலேகூட ஒரு தனித்த சுவையிருக்கத்தான்செய்கிறது. பரிமளம், "அத்தான்" என்று அவனைத் தழுவிக் கொண்டு, அவனது முகத்தை தனது காந்தள் விரல்களால் வருடிய போது காதல் வீணையின் சோகஸ்தாயியை கலையரசி ஒருத்தி எழுப்புவது போலவேயிருந்தது! பாசமலரின் இதழ்கள் எவ்வளவு மென்மையானவை. அந்த மலர் சூடான கண்ணீர்த் துளிகளால் நனையும் போது எவ்வளவு குளிர்ச்சி பெறுகிறது, அத்தகைய ஒரு அன்பு மலராகத்தான் காட்சி தந்தாள் பரிமளம். அந்தக் காட்சி அந்த இடத்திலே அதிக நேரம் அனுமதிக்கப்படவில்லை நின்று கொண்டிருந்த கிழவர் பரிமளத்தின் கையைப் பிடித்துப் பரபர வென இழுத்து, அவள் திமிறி ஓடமுயன்றும்-விடாமல் அவளது கண்களை இறுகக் கட்டி விட்டார், தன் மேலிருந்ததுண்டு வேட்டியினால்! கண்ணைக் கட்டியது போக மிச்சமிருந்த துண்டைக் கிழித்துக் கொண்டார்.

பரிமளம். "அய்யோ! எங்களை விட்டுவிடு! பாவி! பாவி!" என்று கத்தினாள். மிச்சத் துணியால் கிழவர் பரிமளத்தின் கைகளையும் பின்பிறமாக வைத்து கட்டி விட்டார். பரிமளம் அலறினாள். துடித்தாள். துவண்டாள், "சப்தம் செய்தால் செத்துவிடுவாய்!" என்று கிழவர் பயங்கரமாக அதட்டினார். சற்று முன்பு, சாந்த சொருபியாகத் தெரிந்த அந்தக் கிழவரா இவர்? உலகத்தைப் படித்தவர் போல ஆகாயத்தை நோக்கிப் பிரார்த்தனை புரிந்த அந்தக் கிழவர் தானா இவர்? பரிமளத்திற்கு எதுவுமே புரியவில்லை, வருவது வரட்டும் என்று எண்ணிக்கொண்டாள். துரையைப் பார்க்க முடியாமல் தன் கண்கள் மூடப்பட்டு விட்டதை நினைத்து அழுதாள், அந்த அழுகை, அவள் கண்ணை மூடியிருக்கும் துணியை நனைக்கத்தான் பயன்பட்டதுபோலும் -கிழவரின் இருதயத்தை நனைத்திடப் பயன் படவில்லை. "அத்தான்! அத்தான்!" என்று மட்டும் மெதுவாக முணகினாள், கண்ணைத் திறக்க முடியாமல் மெய் மறந்து கிடக்கும் காதலன், அவளைப் பார்க்க முடியாமல் கட்டுண்டு தவிக்கும் காதலி அந்த இருவரிடையே கிழவனார், அவருடைய முகத்திலே நிலவொளி லேசாகப் படர்ந்திருந்தது, சுருக்கம் விழுந்த அவர் கன்னங்களில் கண்ணீர்த் துளிகள் உருண்டு திரண்டு நின்றன.

சாந்தமும் — அமைதியும்— அடக்கமும்—கலந்த வார்த்தைகளை ஆகாயத்திலே மேயும் மேகக் குழுவை நோக்கி அனுப்பியவர்—திடீரென பயங்கர மனிதனாக மாறி—அந்த மாற்றமும்—உடனே அகன்று அவரால் பாதிக்கப்பட்டுக்கிடக்கும் அந்தஇருவரிடையேநின்று கொண்டு கண்ணீர் விடுகிறார்! ஏன்? சுருங்கிய கன்னத்திலே உள்ள கோடுகளில் பாதரசம் போல உருண்டோடும் நீர்த் துளிகள் அவரது தும்பைப் பூ தாடியிலே படியும் போது காலைத் தளிரில் தூங்குகின்ற பனித் துளியைஞாபகப்படுத்துகின்றன. நீண்ட மூக்கும், ஆழத்திலே இருக்கும் விழிகளும், அமைதியான அசைவும் படைத்த அந்தக் கிழவர், திடீரென கோர சுபாவம் கொள்வானேன் — அடுத்த விநாடியே அதே இடத்தில் நின்று கொண்டு அழுவானேன் இந்தக் கேள்விக்குப் பதில் அவருக்கே தெரியவில்லை போலும். அதைத்தான் அவருடைய முகம் விளக்குகிறது. வழியும் கண்ணீரைத் துடைக்காமலே அவர்களை கிழவர் நோக்கினார், அங்கவஸ்திரத்தை எடுத்து பரிமளத்தின் கைகளையும், கண்ணையும் கட்டிவிட்டாராகையால் அவருடைய மேலுடம்பை குளிர் காற்று நேரடியாகத் தாக்கியது. எண்ணி விடக் கூடிய அளவுக்கு எலும்புகள் விலாப் புறங்களிலே! இடுப்பில் கட்டியிருந்த வேட்டியின் மேல் முனையிலே ஏதோ ஒரு முடிச்சு இருந்தது. அதையும் இடுப்பில் பத்திரமாக சொருகிக் கொண்டிருந்தார். ஒரு அழுத்தமான தாள் உரை (கவர்)யும் இடுப்பில் வேட்டிக்கு வெளியே சற்று தலைநீட்டிக் கொண்டிருந்தது. கிழவர் அவைகளை நன்றாக சரி செய்து கொண்டார். கட்டுண்டு கிடக்கும் பரிமளத்தையும் மயக்க முற்றுக்கிடக்கும் துரையையும் குனிந்து பார்த்தார். அப்படிக் குனியும் போது அவரது கண்களிலேயிருந்து சொட்டிய கண்ணீர், பரிமளத்தின் காலிலே விழுந்தது. பரிமளம், துடிப்போடு துடிப்பாக காலை நகர்த்திக் கொண்டாள்.

"யார்?"

"தன் காலிலே ஏது நீர்த் துளி?"

"எங்கிருந்து விழுந்தது?"

இந்தக் கேள்விகளையெல்லாம் உள்ளடக்கிய ஒரே ஒரு சொல்லை-ஆம்-அத்தான் என்ற சொல்லை உதிர்த்தாள். பதில் இல்லை. கிழக்குரல் விம்மியெழுந்தது.

"எந்தக் குற்றமும் எனக்குச் செய்யாத செல்வங்களே! மழலைகளே! பழம் பேசுகிறது கேளுங்கள்!

பரிதாபத்திற்குரிய கிழம் கூச்சலிடுகிறது; செவியைத் திருப்புங்கள்!

கண் திறக்க முடியாமல் இருக்கின்ற கண்மணி! உன் அன்பன் மயக்கம் தெளிந்ததும் அவனிடமும் நான் சொன்ன தைச் சொல்... என்னுடைய சாவுக் கண்ணீர் நன்மைத் தருவை செழித்து வளரச் செய்யப் பயன்படாதா என்று எத்தனையோமுறை ஏங்கியிருக்கிறேன். ஆனால்; இதோ என் வாழ்வின் கண்ணீர் உங்கள் வாட்டி வதைத்து விட்டதை நான் உணர்கிறேன். என் மன்னித்து விடுங்கள். உங்கள் அப்பனை மன்னிப்பது போ என்னை மன்னித்துவிடுங்கள்!

நன்மை யொன்றை--யாரு செய்ய முடியாத விதத்தில் செய்ய வேண்டும் என் எத்தனையோ நாளாய்த் தவித் நிற்கிறேன். சுயநலமும் வஞ் கமும்-சூதும் பொறாமை வேலிகளாய் அமைந்துவிட் மனிதனின் வாழ்க்கைத் தோ டத்திலே-நன்மை மலர்க மலரக் கூடாதாமே! அப் ஒரு கடும் சட்டம் கட எனப்படுவோன் விதித்துவி டானாமே! ஆகவே, நா செய்ய வேண்டுமென் எண்ணியிருக்கிற நன்மை சுருட்டிக் கொண்டு, கட கடந்துபோகிறேன். அதுஎன் நன்மை என்று என் கேட்டு விடாதீர்கள், நீங் யாரோ எவரோ-நான் எப் உங்களிடம் தைரியமா சொல்ல முடியும். நீங் என்னைப் பார்ப்பதே கூடா அது மிகப் பயங்கரமானது நினைக்கிறேன் நான்! ஆக நான் அந்த நன்மையைப்பற் உண்மையைச் சொல்ல ம டேன். அந்த நன்மை யா

ம தெரியாமல் அழிந்துத்தான்போகிறதுபோலும்! உண்மை அழிந்தாலும் லையில்லை—நான் வீணைக்கப்பட்டு, அந்த உண்மை த்தர்கள் கையிலே சிக்கி நான் அனுமதிக்க மாட்ன். அதற்குத்தான் இந்த டை விட்டே வேறு நாடு றேன். யாராவது என் போல ஒரு மனிதன் ப்பானேயானால் — அவம் அந்த உண்மையை ஒப்த்துவிட்டு, சாவை கட் பிடித்துக் கொள்வேன். சாவுக் கண்ணீரைநன்மை மீது அபிஷேகிப்பேன்! எடுத்துக்கொண்ட பெரிய ற்சியில் நீங்கள்எப்படியோ ங்கே வந்து விட்டீர்கள்? ண்டுமென்று வரவில்லை— தெரிகிறது! ஆனாலும் தற்காப்புக்காக உங்கள் யாகிவிட்டேன் நான். ன்று வருகிறேன், என்னை னித்துவிடுங்கள்! தயவு து இங்கு நடந்த இந்த வத்தை மறந்து விடுங்கள். ரோ ஒரு கிழப் பயல்— க்கை வாய் திறந்து போய் புளுகுமாக உளறினன் று நினைத்துக்கொண்டு— ள் காதல் காரியத்தில் ஈடுங்கள்! அதோ—அந்த வாலி அழகானவன்தான்—நல்ல யுமிருக்கிறான். ஆனால் ன் காதல் வலையில் சிக்கிய ற்றே — காதலர்களை க்குப் பிடிக்கவே பிடிக்! அவர்களை நம்பி நான் டி இந்தப் பெரிய காரி தைஒப்படைப்பது!கூடாது து! நான் வருகிறேன்— ப் பிறந்த காதலர்களே! களுக்காகத்தான் சரபோஜி ராஜன் இந்த சல்லாபமண்ட தை கட்டிவைத்திருக்கிறான் று எண்ணிக் கொண்டு ங்கைநடத்துங்கள்!அவன் இதைக் கட்டினன் று உங்களுக்குத் தெரிய ண்டிய அவசிய மென்ன க்கிறது?''

ழவர் இப்படி தன் மனம் ன போக்கில் ஏதேதோ பிக்கொண்டிருக்கும் போது ச்சின் பாதியிலேயே துரை த்துக் கொண்டான்; என்று முழுவதையும் கேட்டு வேண்டுமென்ற ஆவலில் க முற்றவன் போலவே க்தான். ஆனால்; கிழவர்— போஜி, இதை ஏன் கட்டி தெரியுமா?'' என்று ஆரம் போது, ''ஏன்?'' என்று டுவிட இதழ் அசைத்து டான். உடனே அந்த த்தையை அடக்கிக் ண்டு, சமாளிப்பதற்காக து முணகினன். அவ்வளவு ன்; கிழவர் இனி அங்கு க்கூடாது என்ற முடிவு , அவசர அவசரமாக, இறக்கினர். அவர் கீழே ங்கிவிட்டார் என்பதைத் ந்து கொண்ட துரை, னே எழுந்து, தலையை சரி து கொண்டு, பரிமளத்தின் கட்டுக்களை அவிழ்க்க ஆரம்பித்தான். அதுவரையில் அதிசயத்தோடு கிழவரின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்த பரிமளமும், தன் அத்தானின் கரம்பட்டு புத்துணர்ச்சி பெற்றாள். இறந்து போய் மீண்டும் புது ஜென்மம் என்ற கற்பனை உண்மையாகவே நிகழ்வது போல இருந்தது அவர்களுக்கு! பரிமளத்தின் கட்டப்பட்ட கரங்களை அவிழ்த்துவிட்டு, அந்தக் கரத்தை எடுத்து முத்தம் கொடுத்தான் துரை. சுவைத் தளித்த அந்த முத்தத்தை பரிமள சுந்தரியும் தேனில் துவைத் தெடுத்த பலாச் சுளை

# கருணைநிதி

எனக் கருதிப் பெற்றுக்கொண்டாள், கட்டுண்டு கிடந்த அவள் கண்களுக்கெல்லாம் முத்தம் கிடைத்தது. பரிமளம் கண்ணைக் கட்டிய அந்தக் கிழவரை வாழ்த்தினள்.

முத்தத்திலேயே முடிந்து விடவில்லை-அந்நேரம், துரை துள்ளி எழுந்து மனோராவின் பலகணி வழியாகக் கீழே பார்த்தான். பரிமளமும் பார்த்தாள். கிழவர் கடலோரத்தில் சென்று நின்றார்.முதலிலே மனோராவை நோக்கி வந்த மனிதர்கள் அவரிடம் வந்து சுற்றி நின்றார்கள்.

"இவர்கள் நம்மைத் துரத்திய முரடர்கள் அல்ல!'' என்றான் பெருமூச்சுடன் துரை!

"கிழவர் பேசியதையெல்லாம்-கேட்டீர்களா அத்தான்?'

"பாதிக்குமேல் கேட்டேன் புரிந்தும்-புரியாமேலும் கேட்டேன்''

"முழுதும் கேட்ட எனக்கும் அப்படித்தான்!''

"இரு!இரு! அதை கவனிப்போம்.''

கடலோரத்தில் நின்றகிழவர், வந்த ஆட்களுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தார். கரையிலிருந்து, சுமார் இரண்டு மைல் தூரத்தில் ஒரு சிறு வெளிச்சம் தோன்றி மறைந்தது—நெருப்புச் குச்சியைக் கிழித்து யாரோ மேலே எறிந்தது போலிருந்தது அந்த வெளிச்சம்! ஆமாம், அப்படித்தான்!

கரையில் நின்றவர்களில் ஒருவனும் அதே போலநெருப்புக்குச்சியைக் கிழித்துத்தான் மேலே எறிந்தான்.

"என்ன இது?'' என்றாள் பரிமளம்.

"இதுதான்கள்ளத்தோணி என்பது! நெருப்புக் குச்சி வெளிச்ச அடை யாளத்தில், அந்தத் தோணி கரைக்கு வரும் பாரேன்!'' என்றான் துரை!

இருவரும், தோணியைப் பார்த்த படியே நின்றார்கள், கிழவர் அங்குமிங்கும் உலவிக் கொண்டேயிருந்தார்,

"பொழுது விடியும் நேரமும் நெருங்கிவிட்டது போலிருக்கிறதே அத்தான்; நான் எப்படி வீட்டுக்குப்போவது?''

"கொஞ்சம் பொறு! இதைப் பார்ப்போம். இப்போது நாம் கீழே இறங்கினல்,கடலிலேயே தூக்கிப் போட்டு விடுவான் அந்தக் கிழவன்!''

பரிமளம், துரையின் தோளில் முகத்தை அழுத்திய படியே கரையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தோணி கரைக்கு அருகே வந்து நின்றது. ஆட்கள் எல்லாம் தோணியிடம் ஓடினர்கள். கிழவர் நெருப்புக் குச்சியைக் கிழித்து, தன் இடுப்பில் உள்ள தாளை ஒரு முறை எடுத்துப் படித்துக் கொண்டார், தாள் உறையிலே முகப்பில் — புதையல் — என்ற தேய்ந்த எழுத்துக்கள் தெரிந்தன. தீக்குச்சியை கீழேஎறிந்துவிட்டு, உறையை நன்றாகச் சொருகிக்கொண்டு, வேட்டியின் முனையிலிருந்த சிறு முடிச்சையும் சரி பார்த்துக் கொண்டு அவர் தோணியிடம் போனர். பட கோட்டி, அவரை மெதுவாகத் தோணியில் ஏற்றிவிட்டான். ஏறிக் கொண்டார். மற்ற ஆட்கள் ஏதோ பல மூட்டைகளை படகில் அவசர அவசரமாக ஏற்றினார்கள். படகிலிருந்தும் சில மூட்டைகள்துரிதமாககரைக்கு இறக்கப்பட்டன. பின்னர் படகு நகர்ந்தது — மீண்டும் கடலை நோக்கி பயணம் ஆரம்பமாயிற்று அந்தத் தோணிக்கு!

பரிமளமும், துரையும் அந்த காட்சியைப் பார்த்துக் கொண்டே நின்றார்கள்.

சாது போலத் தோற்றினர். பின்னர் மிரண்டார். அதன்பின் நன்மை செய்யப் பூண்ட கோலம் இது என்றார். கடைசியில் கள்ளத்தோணியிலும் ஏறி விட்டார். யார் இவர்?

இந்த நினைவுகள் காதலரை சிறிது நேரம் மௌனமாக்கியிருந்தன. படகு சிறிது தூரம் நகர்ந்து இருட்டில் மறைந்து கொள்ளத் துவங்கியதும், பரிமளம் மறுபடியும் வீட்டுக்குப் போகும் பிரச்சினையில் ஈடுபட்டாள்,

"நல்ல இரவு இது. கோயிலுக்குச் சென்றோம். அங்கே கொம்பேறி மூக்கன் பாம்பு போல ஒருவன் வந்தான். கோபுரத்துக்கு வந்தோம்- விசித்திர மனிதனைக்கண்டோம் நினைக்காத இடையூறுகள் அல்லவா-யாரும் எதிர்பாராமலே வருகின்றன!''

என்று துரை பரிமளத்தின் விரல்களைத் தன் விரல்களால் கோர்த்துக் கொண்டு, கொஞ்சினன்,

"வாருங்கள் தான் போவோம்!'' என்று அவசரத்தைக் காட்டினாள் அவள்,



'நான் இப்போது வரக் கூடாது பரிமளா! நாம் இருவரும் சென்றால்- அந்தக் கோயிலடி ஆள் இருக்கிறானே அவன் நம்மை அடையாளம் கண்டு பிடித்துவிடுவான்; அதனால் நீ மட்டும் புறப்படு! பயப்படாமல் புறப்படு—பொழுதும் விடியப் போகிறது!''

"அது தானே பயமாயிருக்கிறது- பொழுது விடிந்து விட்டால் நான் எப்படிஊருக்குள் நுழைவது! வீட்டில் என்ன நடக்குமோ?''

[ 10ம் பக்கம் ]

# நடுகல்-வாழ்க!

★

நித்தம் பிறக்கும் இரத்த வெய்யில்
உலகின் இருட்டை இழுத்து எறிந்தது.
எழுந்தேன். விழிகள் எனக்குமுன் எழுந்தன.

சேர்த்து மனைவியைப் போர்த்திய உடம்பில்
போர்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டு
வெளுத்த உலகின் வெளிப்புறம் நடந்தேன்.

துடிக்கும் அலைகள்; தாமரை; ஊரில்
படுத்துக் கிடக்கும் பெருமலை; மாந்தளிர்;
பனித்துளிக் கூட்டம் அனைத்தும் மின்னின.

வெளிமான் என்னும் வேந்தனைக் குறித்துப்
பெருஞ்சித் திரனார் பாடிய பாடலைப்
பாடிக் கொண்டே போகையில்; நெருஞ்சிமுள்
நடக்கும் கால்தனில் நறுக்கெனத் தைத்தது.
குளக்கரை வந்தேன். கோதை ஒருத்தி,
போரிடும் அம்புப் பார்வையால், தோள்தனில்
ஈரப் புண்செய் தென்னை அனுப்பினாள்.

தோலுடல் எரியத் தொடர்ந்து நடந்தேன்.
வீதியின் வழியாய் விரைந்து போகையில்;
மலரின் குழியில் மணிநிற வண்டுகள்
விழுந்து கிடக்கும் விபத்தைக் கண்டேன்.

வாய்க்கால் தாண்டி வரப்பிலே நடந்தேன்.
வயலில் நிறுத்திய பயிரின் வகைகள்,
தண்ணீர் கேட்டு என்னை நிறுத்தின.
மூடிக் கிடந்த மடையைத் திறந்து
அவற்றின் தாகம் அடக்கினேன். நடந்தேன்.


முள்ளுக் கருவேல் மரத்தைக் கண்டு
பற்குச் சொடிக்கப் பறந்தேன். ஒடித்தேன்.
திரும்பினேன். கண்கள் திரும்பின வேறிடம்.
பாழ்மண் படத்தின் பக்கமாய் நின்ற
வயோதிகக் கருங்கல் வாவென் றழைத்தது.
ஊமைக் கல்லிடம் உடனே ஓடினேன்.

அந்தக் கல்லின் அங்கம் முழுவதும்
எழுத்து வரிசை இருப்பதைப் பார்த்து
ஆசையோ டதனை வாசிக்க லானேன்.

வெண்பூதி யாளெனும் வெண்கவி யின்மகள்;
கொல்லன் அடித்துக் கொடுத்தவா ளேந்தி;
கழுமலம் எனுசீர் காழிச் சண்டையில்
எதிர்த்த எதிரியை எதிர்த்துப் புகழொடு
இறந்தாள் என்ற சிறந்த சரித்திரம்
அந்த வரிகளில் அடங்கி இருந்தது.

அந்தநாள் தமிழரை, அப்போது பெண்கள்
இருந்த நிலையை; மாதர்க்கு ஆண்கள்
தந்த சுதந்திரத் தன்மையை; ஒருமுறை
நினைத்தேன்: எனது நெஞ்சம் குளிர்ந்தது.

வீர மங்கையின் வாழ்க்கையைச் சொல்லும்
நடுகல் லேநீ வாழ்க,
என்று வாழ்த்தி இடம்பெயர்ந் தேனே!

★  ★


# இளைஞர் காங்கிரஸ்—அங்குமா?

மானிலம் பொய்ப்பினும், மன்மதனே, உனை மறவேன் என்று சங்கீத மொழியால் சபதம் செய்தவள் பின்னர் மாற்றான் ஒருவனுக்கு மாலையிட்டால், அந்த மான்விழியை நினைத்தபடி மனம் நொந்த வாலிபன் தற்கொலையிலே சாந்தி காண்பதுண்டு. பட்டினிக் கொடுமையால் பரதவித்துப் போனவர்கள்— கடன்காரனுக்கு பதில் சொல்லத் தெரியாத கண்ணியம் காப்பவர்கள்—இவர்கள்தான் தற்கொலை தரும் பேரின்பத்தை தேடி அலைவர்.

ஆனால் முதுபெரும் அரசியல் தலைவர்கள் கொலை செய்யப் பட்டிருக்கிறார்களே தவிர தற்கொலை செய்து கொண்டதாக நாம் கேள்விப் பட்டிருக்க மாட்டோம். வெறிச் செயலுக்கு பலியான ஆப்ரகாம் லிங்கனும் அண்ணல் காந்தியாரும்தான் இதுவரை சரித்திரத்தின் பக்கங்களை நிரப்பியிருக்கிறார்கள். இப்போது ஒரு செய்தி வந்திருக்கிறது—பிரேசில் நாட்டுக் குடியரசுத் தலைவர்—வர்காஸ் என்னும் பெயரினர்—71-வயது நிரம்பப் பெற்ற கிழவர் — அவர்தான் சென்ற கிழமை தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்.

அதற்கு முன்கிழமை நடைபெற்ற சில அரசியல் நிகழ்ச்சிக்கும், வர்காசின் தற்கொலைக்கும் தொடர்பு இருக்குமோ என்று இப்போது சந்தேகம் கிளம்பியிருக்கிறது. துப்பாக்கி ஏந்திய சிலர் திடீரென்று ஆகாய விமானப் படையைச் சேர்ந்த மேஜர் ரூபென்ஸ் வாஸ் என்பவரைக் கொலை செய்து விட்டு, கார்லஸ் லாசெர் என்னும் பத்திரிகாசிரியரையும் காயப்படுத்தி விட்டு ஓடி விட்டனர். குற்றவாளிகள் இன்னும் கண்டுபிடிக்கப் படவில்லை. காயமடைந்த பத்திரிகாசிரியர் கம்யூனிசம், லஞ்சம், தலைவர் வர்காஸ் ஆகிய மூன்றையும் ஒழித்துக் கட்டுவதையே தன் வாழ்வின் லட்சியமாகக் கொண்டவராம். புலன் விசாரித்த போலீசார் வர்காசின் மகன் இதில் சம்மந்தப் பட்டிருக்கக் கூடுமென்று அபிப்பிராயப் படுகின்றனர்.

மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு சரியான பதில் சொல்லி, கொள்கைகளை மட்டும் மோதவிடும் பண்புமிக்க செயல் பிரேசில் நாட்டிலே இல்லை. எனவே தான் குள்ளநரிச் செயல் செய்ய கிளம்பி இருக்கின்றனர், உயர் எண்ணங்களின் எதிர் நிற்க முடியாத கோழைகள் சிலர். எதிர்க் கட்சிக்காரர்களை குத்திக் கொலை செய்வதென்பதும், குண்டாந் தடி கொண்டு தாக்குவது என்பதும் நம்நாட்டு இளைஞர் காங்கிரசின் ஏகபோக உரிமை என்றுதான் நாம் நினைத்திருந்தோம். அந்த உரிமையிலே பங்கு பெற வந்து விட்டனர், இப்போது போலீசாரின் சந்தேகத்துக்கு ஆளாகி நிற்கும் வர்காசின் மகனும், அவர் தம் அருமைக் குழுவினரும்!

வர்காஸ் தற்கொலை செய்து கொண்டார்—அவரது ஏற்றமிகு அரசியல் வாழ்விலே குமாரன் ஏற்படுத்திய களங்கம் கழுவப் பட்டது. அரசியலில் அவ்வளவு நாணயத்தையும், கண்ணியத்தையும் கையாண்டு வந்த பெருந்தகையாளராக அவர் வாழ்ந்திருக்கிறார். இங்கேயும் தான் 'அரசியல் புலிகள்' வாழுகிறார்கள்—ஆனால் வர்காசுக்குள்ள வைராக்கியம் அவர்களுக்கில்லை. வர்காசுக்குள்ள, சுயமரியாதை, அரசியல் தூய்மை அவர்களிடம் பூஜ்யம்! பிரேசில் நாட்டு வர்காஸ், தான் பெற்ற மகன் தனக்கு மாசு கற்பித்ததற்கு தற்கொலை செய்து கொண்டார்-ஆனால் இங்குள்ள வார்சாசுகள் பெற்ற பிள்ளைகளின் உணர்ச்சியை பதமாக்கி கைகளில் கழிகளைக்கொடுத்து எதிர் கட்சிக்காரர்களை வேட்டையாடி வர ஏவுகிறார்கள்.

நேருவின் வருகையின்போது குறுந்தடிகளை மூவர்ணக்கொடிக் கம்புகளாக்கி நம்மையெல்லாம் தாக்கிய வர்சாசின் மைனர்கள் இங்கு இளைஞர் காங்கிரசின் போர்வையிலே வாழ்கிறார்கள்; அவர்களைத் தூண்டிவிட்ட வர்காஸ்களும் இன்றும் வாழ்கிறார்கள்—அவர்கள் தற்கொலை செய்து கொள்ளவில்லை!

# காதல்

★

"சீமான்மகனே! இருதயத்துக்கும் இரைப்பைக்கும் வித்யாசம் தெரியாதவனே! உனக்குக் காதல் இலக்கணம் சொல்லித்தருகிறேன்கேள்.பன்னீரிலேகுளித்துபழரசத்திலே நீந்தி கன்னியர் புடைசூழ கட்டிலறைக்குச் சென்றால்தான் வருவேன் என்று சொல்வதல்ல காதல்! காதல் ஒரு நிலவு—அது ஒரு தென்றல்! மாளிகைக்கு மட்டுமல்ல; மண் குடிசைக்கும் வரும். காதல் பணமல்ல—உன் பங்களாவோடு நின்றுவிட!"

— பரப்பிரம்மம் நாடகத்தில்

## சிறிய வயதிலே

அமெரிக்கா—மிசிசிபி நதி தீரம்—ஒரு பள்ளிக் கூடம்—அதிலே ஓர் அறை—அங்கே பரீட்சை நடந்து கொண்டிருந்தது.

அறையின் மூலையில் ஒரு பையன். குழம்பிய மனம்; பயந்த பார்வை; தலையிலே கை—இப்படியாக உட்கார்ந்திருந்தான் அவன். அவன் எதிரே கணிதப் பரீட்சையின் வினுத்தாள் கிடந்தது. ஆனுல் அவன் எதுவுமே எழுதவில்லை; ஒன்றுமே புரியவில்லை; ஏன் தெரியுமா? கணக்கென்ருல் அவனுக்கு கசப்பு!

ஆனுல், அவன் மனமோ, "ஐயோ!......இந்தப் பரீட்சையில் தோற்றுவிட்டால் ...ராணுவக் கல்லூரிக்குப் போக முடியாதே!...அப்படியானுல் என் ஆசை... 'பெரிய வீரனுவோம்' என்ற கனவு...எல்லாம் வீண்தானு?"—இப்படி துடிதுடித்தது; தடுமாறியது முடிவில் அழுகையே வந்துவிட்டது. 'சரிதான்; தோல்வியேதான்' என்று முடிவு கட்டினுன். விடைத்தாளை மடித்தான்; கையில் எடுத்தான்; எழுந்தான்; ஆசிரியரிடம் வந்தான். கொடுத்துவிட்டு வீட்டுக்கு ஓடலாம்—இதுதான் அவன் செய்த கடைசி முடிவு! வேறு வழி?


ஆனுல், அப்போதுதான் ஆசிரியர் செய்திப் பத்திரிகை படிப்பதில் மூழ்ந்து கிடந்தார், குனிந்த தலை நிமிராமல்.

திடீரென்று அவன் மூளையிலே ஏதோ ஒரு எண்ணம்—துளி நம்பிக்கை—கணக்கைப் போடத்தான் வேண்டும் என்ற தைரியம் தோன்றியது. மறுகணம் 'விருட்'டென்று திரும்பினுன். தன் இடத்திற்குப் போனுன். கணக்கைப் படித்தான். மீண்டும் மீண்டும் யோசித்தான். கணக்கையும் போட்டான். முடிவில்...ஆச்சரியப் படுகிறீர்களா? பரீட்சையில் வெற்றியையே கண்டான்.

இப்படிப் பரீட்சையில் 'தோற்று வென்ற' அந்தச் சிறுவன் யார் தெரியுமா?

அவன்தான் இரண்டாவது உலக மகாயுத்தத்தில் ஹிட்லரை விரட்டி ஓட்டிய அமெரிக்கப் பெருந் தளபதிகளில் ஒருவரான ஓமார் பிராட்லி!

## பெரிய மனிதர்கள்




# சின்னப் புது மலரே!
# சிங்கார அகல் விளக்கே!

## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

'ஜாதிகள் ஒழிய வேண்டும்' என்கிருர்கள் நல்லவர்கள். 'ஜாதி மறைந்தால் நீதி சாகும்-' என்கிருர்கள் சில கெட்ட எண்ணத்தினர். இதில் எது நமக்குத் தேவை? ஜாதிகள் ஒழியத்தான் வேண்டும்! அதைக் காட்ட உங்களுக்கு கதை ஒன்று சொல்ல நினைத்துக் கொண்டிருந்தேன். சந்தர்ப்பம் வாய்த்தது; நல்ல கதையும் கிடைத்தது; படியுங்கள்!

ஃ ஃ ஃ

அன்று ஞாயிற்றுக் கிழமை. மாலைநேரம். கடற்கரையின் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன் நான்.

எனக்கு சற்று தூரத்திலே ஒரு கிழவர். முகத்திலே அடர்ந்த தாடி; உடலிலே அழுக்கு உடை! இன்னுமொரு அதிசயம்; அவர் அழுது கொண்டிருந்தார்.

எனக்கு சந்தேகம் தோன்றியது. அவர் அழுவானேன்? உடனே எழுந்தேன். அவரிடம் போனேன். "தாத்தா" என்று பழக்கப்பட்டவனைப் போலக் கூப்பிட்டேன்.

அவர் தலை நிமிர்ந்தார். என்னைப் பார்த்தார. "ஏன் தம்பி?" என்ருர்.

"கடற்கரைக்கு எல்லோரும் சிரிக்க வருகிருர்கள். நீங்கள் ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

இப்படிக் கேட்டதும் அவர் கடலைப் பார்த்தார்; சிறு புன்னகை செய்தார். "தம்பீ! நினைத்தவுடன் எல்லோரும் சிரிக்க முடியும்; ஆனுல் அழமுடியாது. ஏனெனில் அழுகைக்குள் எப்போதும் ஒரு கதை இருக்கும். என் நிலையும் அப்படித்தான். காரணம் கேட்கிருயே, சொல்லட்டுமா? என்ருர்.

'கதை' என்ற சொல் காதில் பட்டபின்னும் நான் ஏன் நிற்கப் போகிறேன்? பக்கத்தில் உட்கார்ந்தேன்; காதைத் தீட்டிக் கொண்டேன்.

அவர் சொன்னுர்:

"தம்பீ! இன்று பரதேசிக் கோலத்தில் இருக்கிறேன் நான். ஆனுல் ஓராண்டுக்கு முன்பு ... பணம் படைத்தவன் ... பட்டாடை உடுத்துபவன் ... அழகர் கோவிலின் பெரிய அதிகாரி'

எனக்கு மனைவி இல்லை; மக்கள் இல்லை; ஆனுல் என் நெஞ்சில் அன்பு இல்லை என்று எண்ணிவிடாதே! எனது அன்பை எல்லாம், ஆசையை எல்லாம் ஏற்றுக் கொண்ட ஒரு சின்னத்தம்பி என் பெரிய வீட்டில் இருந்தான்.

அவன் யார்? இது எனக்கே தெரியாது! எங்கிருந்தோ வந்தான். 'அப்பா இல்லையா?' என்றேன்; 'அம்மா இல்லையா?' என்றேன் 'அனுதையா?' என்றேன் 'ஆமாம்' என்பதாகத் தலையை ஆட்டினுன். வாயைத் திறக்கவில்லை. பாவம், அவன் ஊமை! அவன்மேல் எனக்கு இரக்கம் உண்டாயிற்று. அன்று முதல் என்வீடுதான் அவன்வீடு. அவனே என் மகனுனுன்.

வாய்தான் ஊமை. ஆனுல் அவன் பெரிய புத்திசாலி, தம்பி! எனக்கு வேண்டிய பணிவிடைகள் எல்லாவற்றையும் அவனே செய்வான். சுடுகாட்டைப் போலிருந்த என் வீட்டையே மாளிகையைப்போல ஆக்கிவிட்டான். அத்தனை சுறுசுறுப்பு! எனக்கு ஒரே மகிழ்ச்சி. கோவிலில் வேலை முடிந்ததும் நேரே வீட்டுக்கு வந்துவிடுவேன். பேச முடியாத அந்தச் சிறுவனின் பக்கத்திலேயே இருப்பதில் எனக்கு ஒரு ஆசை.

ஆனுல் அந்த ஆசை நீடிக்கவில்லை தம்பி. அப்போது திருவிழா சமயம். ஒருநாள் நான் கோவிலில் வேலையாக இருந்தேன். அப்போது ஒரு விஷப் பூச்சி—கோவில் குருக்கள் என்னிடம் வந்தான். "கேட்டீரா ஐயா சேதி? ஊமை ஊரைக் கெடுத்துவிட்டது....உன் வீட்டில் இருக்கிருனே ஒரு பொடியன், அவன் தீண்டக் கூடாதவனும்; பறையனும்! அவனை உடனே வீட்டை விட்டுத் துரத்தும்; இல்லையேல்......உமது வேலை..." என்று இழுத்தான்.

அவ்வளவுதான்; 'குபீர்' என்று கோபம் வந்தது எனக்கு. வீட்டை நோக்கி ஓடிவந்தேன்.

சமையலறையிலே, கத்தியால் ஏதோ காய்கறி நறுக்கிக் கொண்டிருந்தான். அவன் நான் மிருகம்போல் அவன் மேல் பாய்ந்தேன். கையிலிருந்த கத்தியைப் பிடுங்கினேன். 'பளார்; பளார்' என்று அறைந்தேன். அவன் அழுதான்; அப்பப்பா! அவன் பட்டபாடு! துடித்த துடிப்பு! நினைத்தால் அழுகை வருகிறது தம்பி! இன்று அழுகிறேன்; ஆனுல் அன்று ஆத்திரப்பட்டேன். "சீ, கழுதை! வீட்டைவிட்டு ஓடு!" என்று அலறினேன். கோபத்தோடு கையிலிருந்த கத்தியை வீசி எறிந்தேன்.

ஆனுல்......ஐயோ!.....தம்பி, நான் எதிர்பாராதது நடந்துவிட்டது. நான் வீசிய பாழும் கத்தி, அந்தப் பாலகனின் இடது கண்ணிலே பட்டு கீழே விழுந்தது. "ஓ" என்று கூச்சலிட்டான், அந்தப் பேசமுடியா தம்பி.

நான் என் அறைக்கு ஓடி வந்தேன். அங்குமிங்கும் நடந்தேன். என் கால்கள் நடுங்கின; கைகள் படபடத்தன. என் கண்கள் அறையைச் சுற்றின. அந்த அறையில் நிலவியிருந்த 'சுத்தம்' என்னைப் பார்த்தது. "எங்கே அவன்?" என்று கேட்பதாகத் தோன்றியது.

அந்தப் பையன் களிமண்ணுல் செய்து வைத்திருந்த ஒரு விளையாட்டு காந்திப் பொம்மையைப் பார்த்தேன். "தீண்டாமை பொல்லாத நோய்!" என்று அது சொல்லிச் சிரிப்பதாக எண்ணினேன்.

நான் கண்களைப் பொத்திக் கொண்டேன். தோட்டத்துப் பக்கம் திரும்பினேன். அழகாகப் பூத்திருந்த வண்ணப் பூக்கள். என்னைப் பார்த்தன. "எங்கே அவன்? எங்களுக்கு தாகம் எடுக்கிறதே, தண்ணீர் ஊற்ற வேண்டுமே! சீக்கிரம் வரச் சொல்லுங்கள்!" என்றன.

"பாவி! உனக்காக உழைத்தானே அந்தப் பாலகன்...... அவனை..." என் மனசாட்சியும் இப்படி வசைபாட ஆரம்பித்தது. நான் தடுமாறினேன். திடீரென்று சமயலறைக்கு ஓடினேன். அங்கே அவன் இல்லை. திடுக்கிட்டேன். உடனே அவன் அறைக்கு ஓடினேன். அங்கேயும் காணவில்லை. ஆனுல் இரத்தம் சொட்டிய கடிதம் ஒன்று இருந்தது. அதை எடுத்தேன்; படித்தேன்.

[ 10-ம் பக்கம் ]

# ராமாயணத்துக்குத் தடை.....

[ 1-ம் பக்கம் தொடர்ச்சி ]

உலகசரித்திரம் என்ற நூலில் நேரு சொன்ன வார்த்தைகள் தான் மேலேயிருப்பவை.

பெரும்பாலானவர் எதிர்ப்புக்குப் பயந்திருந்தால்—அந்தப் பெரும்பாலான வரை தன்அன்பு அணிவகுப்புக்கு அழைத்து வந்திருக்கமுடியாது கௌதம புத்தரால்!

பெரும்பாலானவர் நம்பும் கொள்கையை மறுக்கக் கூடாது என்று எண்ணியிருந்தால் உலகம் உருண்டை என்ற உண்மை பிறந்திருக்காது!

கண்ட கண்ட தேவதைகளை வணங்கிக் கொண்டு காட்டுமிராண்டிகளாய் வாழ்ந்த பெரும்பாலான மக்களிடையே-மகமதுநபி தோன்றவில்லையா? மக்களை வேறு வழிக்குத் திருப்பவில்லையா?

காட்டுமிராண்டிகளின் காலத்திலே சீர்திருத்த வாதிகளுக்குத் தரப்பட்ட பரிசு-நாகரிக காலமெனச் சொல்லப்படும் இப்போதும் தரப்படுகிறது என்றால் -அறிவுலகம் திடுக்கிடத்தான் வேண்டியிருக்கிறது.

"ராமாயணம்" நடத்தும் ராஜமாணிக்கம் அவர்கள் பாராட்டப்படுகிறார்; ராதா — தடை விதிக்கப்படுகிறார்!

அழுகி நாற்றமெடுத்த குஷ்டரோகியின் பிணம் ராமாயணம்!

அதை மூடி மறைத்து, வாசனைத் திரவியங்களைத் தெளித்து ஊர்வலம் விடுகிறார் ராஜமாணிக்கம்.

நோய் பரவக்கூடாது என்கிற நல்ல எண்ணத்தில் மூடப்பட்ட துணியைக் கிழித்து சுய உருவைக்காட்ட முனைகிறது அறிவியக்கம்!

இதைப் பொறுக்க முடியவில்லை சர்க்காருக்கு!

ராமனுக்கு வக்காளத்து வாங்கி வரிந்து கட்டிக்கொண்டு புறப்படுகிறது - உண்மையிலேயே ராமாயணம் காப்பாற்றப்படவேண்டுமானால் சர்க்கார் கையாள வேண்டிய முறை இதுவல்ல!

ராமாயண பக்தரையும்—எதிர்ப்பாளனையும் ஒரே மேடையில் நிறுத்தி வாதப் பிரதிவாதம் முடிந்த பிறகு பொது மக்களின் தீர்ப்பைக் கண்டிடும் ஏற்பாட்டைச் செய்திடவேண்டும். இல்லையேல்-ஒரே நாளில் ராதாவையும் – ராஜமாணிக்கத்தையும் அடுத்தடுத்த நாடகங்களாக ராமாயணத்தை நடத்தச் செய்து எங்கே உண்மை ஒளிவிடுகிறது? எங்கே பொய்மை குதித்தாடுகிறது—என்பதையாவது முடிவு கட்டவேண்டும். இதற்கெல்லாம் தைரிமில்லாதவர்கள் என்றால்—ராமாயணக் கதையையே யாரும் நடத்தக் கூடாது என்று பொது உத்திரவு போட வேண்டும்!

ராமனை அவர்கள் மதிப்பது போலவே—ராவணனை நாங்கள் மதிக்கிறோம்.

ராம பக்தர்கள் மனம் மட்டும் புண்படக் கூடாதாம்!

ராவண பக்தர்கள் மனம் புண்படலாமாம்!

ராவணனை இரக்கமற்றவன் என ஏசலாமாம்!

வடநாட்டிலே ராம லீலா திருநாளில் தென்னிலங்கை வேந்தனின் திரு உருவத்திற்கு தீயிட்டு வேடிக்கை பார்க்கலாமாம்! அதை நேரு கண்டு ரசிக்கலாமாம்!

குன்றெடுக்கும் அந்த நெடுந் தோளன் கொளுத்தப்படும் அந்த கோர விழாவைக் கண்டு நாங்கள் குமுறக் கூடாதாம்! இப்படி ஒரு சட்டமாம்! எங்குமில்லாத அநியாயம்! கொடுமை! கொடுமை!!

முன்பொரு முறை கவிஞர் பாரதிதாசன் தீட்டிய இரணியனை தடை செய்தார்கள். தி. மு கழகத் தோழர்கள் தடையை மீறினர். சிறையில் வாடினர். ஆரிய மாயை நூல் தடை செய்யப்பட்டது—வட ஆற்காடுமாவட்ட முழுதும் நூறு இடங்களில் ஆரியமாயை தடை மீறிப் படிக்கப்பட்டது. சர்க்கார் பணிந்தது. இன்று ராமாயணம் தடை செய்யப்படுகிறது! ஆம்—ஆரிய இனக்காவலன் ராமன் உயர்த்தப்படுகிறான் —பாதுகாக்கப்படுகிறான். திராவிடக் கோமான் இராவணன் அவமானப் படுத்தப் படுகிறான்.

— எத்தனை நாளைக்கு இந்த நிலைமை?

உண்மையான ராமாயணம் ஊரேல்லாம் நடத்திக் காட்டப்படும் காலம் வராமலா போய் விடப் போகிறது? தடை மீறியும் ராமாயணம் நடத்தப்பட்டது — ராமர், லக்ஷ்மணர் சீதை முதலியோர் கைது செய்யப்பட்டனர் என்ற செய்தி மலராமலா போகப் போகிறது?

படை படையாகத் தடை மீறுகிறார்கள்—ஆகவே தடை தளர்ந்தது என்று சொர்க்கவாசல் ராஜன்போல -இவர்களும் சொல்லாமலா போகப் போகிறார்கள்?

வடநாட்டில் ராவணன் உருவம் கொளுத்தினால் —தென்னாட்டில் ராமன் உருவைக் கொளுத்துவோம் என்ற எச்சரிக்கை முழக்கம் கேட்காமலா போகப் போகிறது?

நிச்சயம்! நிச்சயம்!! நேர்மை வெல்லத்தான் போகிறது! நன்னெறி வாழத்தான் போகிறது! அது அண்மையில் என்பதைத்தான் இந்த "தடை விதிப்பு" விளக்குகிறது! ஃ

# புதையலைப் பற்றி....

★

அன்புடையீர், முரசொலியில் வெளியான 'புதையல்' என்ற தொடர்கதையின் அறிமுகத்தைப் பார்த்தேன், அதன் மூலம் மருங்கப் பள்ளத்தில் கிடக்கும் பொன் கிட்டக்கல்லின் மேன்மையையும், மனோராவின் சிறப்பையும் அறிந்தேன்.

அதன் காரணமாக மனோராவுக்குச் சென்று வரும் இளைஞர்களுக்கு அளவே கிடையாது. அவர்கள் பொன் கிட்டத்தின் தேவையையும் மனோராவின் சிறப்பையும் விளக்கிப் பேசிக்கொண்டு வருவதைப் பார்த்தால் 'முரசொலி' அவர்கள் உள்ளத்திலிருந்து ஒலிக்கிறது என்பது தெளிவாகிறது ஆகையால், இருளடைந்த வெளவால். மண்டபத்தை எழிலுறச் செய்ய மக்களுக்கறிமுகப்படுத்தச் சிந்தனைத்துணையும், பத்திரிகையும் தேவை. சீரழிந்த கட்டிடத்தையும், அதனைச்சுற்றியுள்ள சிற்றூர்களையும் சிறப்புடன் பல்லாயிரக்கணக்கான மக்களுக் கறிமுகப்படுத்தி அவர்களை அங்குபோய்ப் பார்க்க ஆவலை எழுப்பி நீலக்கடல் ஓரத்திலே வீரநெப்போலியனை நினைவூட்டி நின்று கொண்டிருக்கும் அந்த ஏழடுக்கு எழில் மாடமான மனோராவை, அறிஞர்களின் அறிவுலகமாக, சிந்தனையாளர்களின் பூஞ்சோலையாக பண்டைச் சிறப்பைப் பலருக் கறிவித்து பாருங்கள் அந்தப் பாழ்மண்டபத்தை பாருங்கள், 1814ல் அந்த ஊர்இருந்த சிறப்பை, நிலையை போய்ப் பாருங்கள் என்று சிபாரிசு செய்வதுபோல் எழுதும் தங்கள் 'முரசொலி'யின் பணிக்கு இங்குள்ள மக்கள் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டவர்கள் என்பதை சொல்லாமலிருக்குமனம் இடந்தரவில்லை.

**இரே. கோவிந்தசாமி.**

[ பேராவூரணி வட்டாரத்தைச் சேர்ந்த முடச்சிக்காடு]
30—8—54

## புதையல்...

[ 7–ம் பக்க தொடர்ச்சி ]

"அதெல்லாம் வீட்டில் ஒன்றும்நடக்காது பரிமளம்! ஏதாவது பெற்றோர்கள் சீறினால்—நான் சொல்லிக்கொடுத்த அந்த கதையை முழு சாமர்த்தியத்தோடு சொல்லிவிடு! அதையும் மிஞ்சி, அப்பா அம்மா—ஆத்திரத்தைக் கொட்டினால்; விஷயம் வெளிச்சமாகி விட்டால்—உடனே நீ ஆரம்பித்துவிடு! காதலனைத்தேடி நான் சென்றதிலே என்னப்பா தப்பு? இதோ மாட்டியிருக்கிறீர்களே—வள்ளி மணவாளன் படம்—அந்த வள்ளி தினைப்புனத்தில் தேடிக்கொண்ட காதலன் தானே அந்த முருகன்? இப்படிக்கேள் அவர்களிடம்? சங்க இலக்கியத்திலே இருக்கிற காதல் நிகழ்ச்சிகளையெல்லாம் உதாரணம் காட்ட ஆரம்பித்துவிடாதே! சங்க இலக்கியம் என்றால் உன் பெற்றோர்கள்—ஏதோ ஒரு ஊர் என்று எண்ணிக் கொண்டிருப்பார்கள்."

"சரி! சரி!வருவது வரட்டும்-நான் புறப்படுகிறேன்—எப்போது சந்திப்பது?"

"சந்திப்போம் கண்ணே—கோயிலடியாயினும் — கோபுர மேறியும்-அந்த இருவர் கண்ணிலும் படாத இடத்திலே அல்லவா இனிசந்திக்க வேண்டும்!"

'சொல்லுங்கள். நேரமாகிறது!'

"அதே கோயிலில்--அதே நேரத்தில்--வரும் வெள்ளிக்கிழமை சந்திப்போம்--வா போவோம்!" **[ வளரும் ]**

## பிறைவானம்...

[ 9-ம் பக்க தொடர்ச்சி ]

"அப்பா! அனாதையாக வந்தேன்; அனாதையாகப் போகிறேன். ஆனால், உங்களிடம் நான் கொண்டிருந்த அன்புக்கு அடையாளமாக என் கண்களில் ஒன்றையும் விட்டுப் போகிறேன்......என்னை மன்னியுங்கள்."

நான் 'ஐயோ' என்று அலறினேன். அலறி என்ன பயன்?

அவனைத் தீண்டத்தகாதவன் என்று அடித்தேன். ஆனால் என் மனதை சோகம் தீண்டிவிட்டது. அந்தச் சின்னப் புது மலரைக் கசக்கி எறிந்தேன்; சிங்கார அகல் விளக்கை உடைத் தெறிந்தேன். ஆனால் பிறகு அழுதேன்.

அன்றே வேலையை ராஜிநாமா செய்தேன். ஊர் சுற்றுகிறேன்; அவனைத் தேடுகிறேன்; "சின்னப் புது மலரே! சிங்கார அகல் விளக்கே! எங்கே இருக்கிறாய்? எங்கே இருக்கிறாய்?" என்று கூவிகூவித் தேடுகிறேன். கிடைக்கவேயில்லை"

ஃ ஃ ஃ

தாடிக்காரர் கதையை முடித்தார். எழுந்தார். நடந்தார். அவர் விம்மி அழும் சத்தமும் என காதுகளில் விழுந்தது.

**— சொர்ணம்**






# கள்ளோ? கவிதையோ?

"சாவு ஒரு அருமையான முக மூடி; உயிருள்ளவர்கள் அதை அணிந்து கொண்டபோது அதை வாழ்க்கை என்கிறோம்"

புவி வாழ்க்கையிலே விரக்தி கொண்டு முக்திவழி தேடப் போகும் கங்கைக்கரை வேதாந்தியைவிட வேகமான நடையில் இப்படி சமுதாயத்தைத்தாக்குபவன் யார் என்று கேட்கத் தூண்டும். உண்மையில் புதுமைக் கவிஞன் செல்லி தான் இந்த வார்த்தை மாலையைக் கோர்த்தவன். பொருமையும் பொச்சரிப்பும் சமுதாயத்திலே உதயமாகும்போது செல்லி அந்த தீய உணர்ச்சிகளைத் தாக்குவதில்லை; மாறுக, அந்த உணர்ச்சிகளை உருவாக்கிய சமுதாயத்தின்மீதே சிங்கமென சீறிவிடுகிருன்.

சிறுவயது முதலே செல்லி ஒழுக்கம் என்னும் பெயரால் வற்புறுத்தப்படும் கட்டுப்பாடுகளை வெறுத்து, ஒரு விபரீதமான சூழ்நிலையை உண்டாக்கிக் கொண்டு அதிலேயே நீச்சலடித்துப் பழக்கப்பட்டவன்.

சிறுவனுக இருந்தபோதே செல்லி தன் அறையில் புகை மண்டலத்தை உண்டுபண்ணி "நான் பேய்களைப் பார்ப்பதற்கு ஆராய்ச்சி நடத்துகிறேன்" என்று சொன்னுனும். அந்தக் குறும்புச் சிறுவன் பின்னர் எப்படி 'சமுதாய விரோதி'யாக மாருமலிருக்க முடியும்?

உணர்ச்சிக்கு அடிமையாவதைத்தான் செல்லி உல்லாச வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவம் என்று கருதினுன். அழகை ரசிப்பதில் தான் மானிட வர்க்கத்தின் தனிச் சிறப்பு அமைந்து கிடைப்பதாகநினைத்தான். மொத்தத்தில் செல்லி ஒரு உணர்ச்சிப் பெட்டகம்; ஐம்புலன்களின் ஏக போக அடிமை!

காதலின் மேன்மையைப் பற்றி செல்லி இயற்றிய கவிதைகள்மதுக்கோப்பைகளாகத் திகழ்கின்றன. ஆனுல் அவனுடைய சொந்த வாழ்க்கையோ காமக் களியாட்டங்களில் ஊறித் திளைக்கும் ஒருகாண்டா மிருகமாக அவனை காட்டிக் கொடுத்துவிடுகிறது. ஒருத்தியோடு சேர்ந்தாற்போல் பல ஆண்டுகள் வாழ்ந்ததாக அவன் கனவுகூட கண்டிருக்கமாட்டான் என்றே நாமெல்லாம் நம்பவேண்டியவர்களாகிறோம்; அப்படி இருக்கிறது அவன் அமைத்துக் கொண்ட வாழ்க்கை!

அதிகாரத் தொனி—அது அன்பே உருவான அப்பாவிடமிருந்து வந்தாலும் சரி; சர்வ வல்லமை வாய்ந்த அரசாங்கத்தினிடமிருந்து வந்தாலும் சரி; செல்லி அதை எதிர்த்துப் போரிட சற்றேனும் தயங்கியதே கிடையாது. எனவேதான் குடும்பத்தின் கட்டுப்பாடுகளினுல் நொந்து போயிருந்த ஹேர்ரியட் வெஸ்ட் புரூக் என்னும் மாது சிரோன்மணிக்கும், குடும்பம்என்னும் அமைப்பையே விரும்பாத செல்லிக்கும் காதல் ஏற்பட்டது. இத்தனை நாட்களும் தனக்கு காதல் போதை வழங்கி வாழ்ந்த முறைப் பெண்ணும் குரோவ் என்பவளை தவிக்கவிட்டு விட்டு, திடீரென்று ஹேர்ரியட்டை அழைத்துக் கொண்டு செல்லி ஊரை விட்டே ஓடிவிட்டான். அவளை எடின்பரோவிலே திருமணம் செய்து கொண்டான்.

ஹேர்ரியட்டோடாவது செல்லி வாழ்ந்தானு? அதுவுமில்லை. எலிசபெத் ஹிச்சேனர் என்னும் பள்ளி ஆசிரியைமீது மானசீகக் காதல் கொண்டு அந்தக் காதல் மயக்கத்திலே உன்னதமான கவிதைகளை உலகிற்கு வழங்கினுன்.

இந்த நேரத்தில்தான் செல்லிக்கு குட்வின் என்பவர் நண்பரானுர். குட்வினின் அருமைப் பெண்ணும் மேரியின் மீது கண்டதும் காதல் கொண்டான். கைப்பிடித்தமனைவி ஹேர்ரியட்டையும் அருமைக் குழந்தையையும் தவிக்கவிட்டு செல்லி மேரியோடு ஸ்விட்சர்லாந்துக்கு ஓடிவிட்டான். அங்குதான் செல்லியின் வாழ்க்கையில் ஒரு, வேதனையான கட்டம் உருவாயிற்று.

பாயும் நீர் வீழ்ச்சியிலே, இயற்கையின் நிர்வாணத்தைக் கண்டு இலக்கியம் சமைத்த செல்லி தன் அன்புமனைவியாம் ஹேர்ரியட்டின் கண்கள் ஒரு மாபெரும்நீர் வீழ்ச்சியாக மாறியிருப்பதை நினைத்துப் பார்க்கவே யில்லை. வானம்பாடியின் கானமிர்தத்தைச் சுவைத்து தேன் கவிதைகளை தேடித்தந்த செல்லிக்கு, தன் குழந்தையின் அழகுமழலையை கேட்க வேண்டுமென்ற துடிப்பே தோன்றவில்லை. மேரியின் அணைப்பிலே அவன் மேதினியை மறந்து வாழ்ந்தான். ஸ்விட்சர்லாந்தின் பனிமூடிய சிகரங்களிலே செல்லி மேரியோடு பறந்து திரிந்தான்.

கவிஞன் காதல் பட்டியலிலே சேர்க்கப்பட வேண்டிய மற்ருெரு சோக நிகழ்ச்சியும் இருக்கிறது. செல்லியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட மேரிக்கு பேனி என்று ஒரு தங்கையுண்டு. அவளுக்கோ செல்லியின்மீது அபாரக் காதல்! அது தன் சகோதரியால் தகர்த்தெறி



யப்படவே பேனி தற்கொலை செய்து கொண்டாள்!

ஸ்விட்சர் லாந்திலிருந்து தாயகம் திரும்பிய செல்லி தன் மனைவியைப் பார்க்கவே முடியவில்லை. வண்டு மனப்பான்மை கொண்டவனின் மனைவியாக வாழ்வதைவிட சாவே இதம் தருமென்று கருதி அந்தப் புனிதவதியும் தற்கொலை செய்து கொண்டாள்.

இந்த சோகச் செய்தியைக் கூட செல்லி ஒரு சுகம்தரும் செய்தியாக்கிக் கொண்டான். மனைவிஸ்தானம்காலியான காரணத்தால் இத்தனை நாட்களும் ஆசைநாயகியாக இருந்த மேரி, பின்னர் சட்டவரம்புக்குட்பட்ட வாழ்க்கைத் துணைவியானுள். இருந்தாலும் அவர்கள் வாழ்க்கை அமைதியாகச் செல்வதை ஹேர்ரியட்டின் தந்தை தடுத்துவிட்டார். செல்லி சமுதாயத்தின் அபாயச் சின்னம் என்றும், எனவே தன் குழந்தைகளை வளர்க்கக்கூட அவன் தகுதிபெறவில்லைஎன்றும் அவர் குற்றம் சாட்டினுர். செல்லி ஒரு சமுதாய விரோதி என்பதை ஆமோதிப்பதைப்போல, கவிஞனிடமிருந்து அவன் குழந்தைகளை பிரித்து வைக்கும்படி சட்டமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது. செல்லி கொதித்துக் கிளம்பினுன்!

"என் நாட்டின் சாபமெல்லாம் உன் மீதுதான்..." என்று துவங்கும் கவிதையை எழுதி நீதிபதிமீதுள்ள தன் கோபத்தையெல்லாம் தணித்துக் கொண்டான்.

நீதிமன்றத்தால் கூட செல்லிக்குப் பாடம் கற்பிக்க முடியவில்லை. நீதிபதியின் தீர்ப்பை 'தேசப் பிரஷ்ட'மாக நினைத்து செல்லி இத்தாலிக்கு பயணமானுன். அங்காவது அவன் தன் உணர்ச்சிக்கு வேலி போட்டானு? அதுவும் இல்லை.

எமிலியா விவியானி, திருமதி ஜேம்ஸ் வில்லியம்ஸ் என்னும் இரு சுந்தரவதிகள் செல்லியின் சிந்தையைக் கவர்ந்தனர். எங்கும் இனிக்கும் இளங்கரும்பாய்த் திகழும் செல்லியின் காதல் கவிதைகளெல்லாம் இந்த நேரத்தில்தான் எழுதப்பட்டன.

ஒருநாள் செல்லியும் அவனது நண்பர் ஒருவரும் படகிலேஉல்லாசப்பயணம் சென்றனர். பாறையில் மோதி படகு உடைந்ததாலோ, புயல் வீசியதாலோ என்னமோ செல்லி சென்ற படகு பின்னர் திரும்பவேயில்லை; பத்து நாட்கள் சென்று இரு பிணங்கள்தான் கரைக்கு வந்தன.

கோனேல் நடத்தையில் 'கிருஷ்ண பரமாத்மா'வையும் மிஞ்சினுலும்கூட செல்லி கவிதை மாளிகையின் கூரையை வேய்ந்திருக்கிருன். அவனது உணர்ச்சி மிகுந்த கவிதைகள் ஆங்கில இலக்கியத்தின் கற்பனை வளம் கொழிக்கும் பொன்னேடுகள். கள்ளுக்கும் கவிதைக்கும் உள்ள வித்தியாசத்தைக் குறைத்த மாபெருங் கவிஞனும் செல்லிக்கு, சாகும் போது வயது 29—தான்!

●


## சித்ரா—ஆண்டு மலர்

●

இவ்வாண்டு சித்ரா மலர் கண் கவரும் வனப்பினதாக, கருத்துப் புதையலாக அமைந்திருந்தது. சினிமா தாரகைகளின் வர்ணப் படங்கள் மலரை நுகர்வோரின் மனதை குளிரவைக்கத் தவருது. ஆர்ட்பேப்பர்—ஏராளமான பக்கங்கள். விலை ரூ. 5.

3. திருமலைப்பிள்ளை-தெரு. சென்னை-17.

# கடைசிப்பக்கம்

இளமைப்பித்தன்—உதகை

(?) அழகான பெண் ஒருத்தி போதும் போதும் வரும் போதும் வேட்டை நாய்களைப் போல சில மைனர்கள் சுற்று கிறார்கள். அதற்குத் தக்க பாடம் கற்பிக்க, உங்களால் வழி சொல்ல முடியுமா?

*ஏன் முடியாது? அந்த அழகான பெண் — தன்னைப்பின் தொடரும் மைனர்களுடைய சகோதரியை சில நாட்களுக்கு கூடவே அழைத்துச் செல்லட்டும். பின்னர், 'மைனர்'கள் தானகவே மறைந்துவிடுவார்கள்.*

சுப்ரமணியம்—சென்னை 1.

(?) திருவள்ளுவர் குறளையும் — ராஜாஜி எழுதும் சக்கரவர்த்தி திரு மகனையும் எதற்கு ஒப்பிடலாம்?

*ஏன்; புதியதொரு உவமையையே உண்டாக்கலாமே! "மலையும், மடுவும்"-"மலரும், தளையும்", என்றெல்லாம் உவமை கூறுவதற்குப் பதிலாக "குறளும் சக்கரவர்த்தி திருமகனும்" எனது புது உவமை கூறலாம்!*

மல்லையன் — போத்தனூர்.

(?) வருங்காலத்தில் தி. மு, க. வும் கம்யூனிஸ்டும் ஒன்று சேரவேண்டு மேன்பது எனது கருத்து. உமதுஅபிப்பிராய மேன்ன?

*கம்யூனிஸ்ட் என்ற லட்சியச் சொல்லை தி. மு. கழகம் தன்னோடு இணைத்துக் கொண்டு திராவிடக் கம்யூனிஸ்ட் கட்சி என்று தன்னை அழைத்துக் கொள்ள தயார்! அதுபோல கம்யூனிஸ்ட்கட்கு, தன்னோடு, திராவிடம் என்கிற நாட்டைக் குறிக்கும் நமது இலட்சியச் சொல்லை இணைத்துக் கொள்ளத் தயார் தானா? தயார் என்றால் ஒன்று சேர நமக்கு அட்டியில்லை!*

கந்தசாமி - திருக்கழுக்குன்றம்.

(?) நவாப் ராஜமாணிக்கத்தின் ராமதாஸ் நாடகத்தில்—மகாத்மாகாந்தி ஸ்ரீராமருடன் ஐக்யமாகும் காட்சி காட்டப் படுகிறதாமே; உங்கள் கருத்தென்ன?

*கோட்சே காந்தியை துப்பாக்கியால் கொன்றான் — இவர் நாடகத்தால் கொல்லுகிறார் போலும்!*

பாலகருணாநிதி. — வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(?) காதலனிடம் காதலி எதிர் பார்ப்பது எதை?

*தற்காலத்தில் — ஒரு தாலிக் கயிற்றை! அல்லது பதிவு மணத்தை!*

ப. தங்கராசு—பவளவத்தை

(?) தி. மு, க. வுக்கும் காங்கிரசுக்குமுள்ள அடிப்படை வித்தியாச மேன்ன?

*காங்கிரசிடம் "அடிப்படை" ஏராளமாக(!) இருக்கிறது தி. மு. கழகம் அமைதியை அடிப்படையாகக் கொண்டது!*

எஸ். கோவிந்தசாமி—சிதம்பரம்.

(?) மனிதனைக் கெடுப்பது — கண்ணா? எண்ணமா?

*கண்வழியே நுழையும் எண்ணம் சிலசமயங்களில் மனிதனைக் கெடுப்பதுண்டு! குருடர்களிலும் கொடியோர் இருக்கிறார்கள்.*

ஸ்ரீயம் — நாகர்கோயில்.

(?) தி. மு. கழகம் பலாத்காரத்தில் நம்பிக்கை யுடையது என்று திரு. கோச்சியிலிருந்து வெளியாகும் தமிழ் ஏடு ஒன்று குறிப்பிடுகிறதே; இதன் உண்மை என்ன?

*பொய்ச் செய்திகளை எழுதி மக்களை ஏமாற்றலாம் என்பதில் நம்பிக்கை யுடையது அந்த ஏடு! அவ்வளவுதான்!*

துரை. முருகேசன் — காரமடை

(?) நீலவானைப் பொன்னுலகு செய்யும் வெண்ணிலவு ஒரு கவிஞனைமாறி காவியம் பாட ஆரம்பித்தால்......

*அந்தக் காவியத்திலே வர்ணனைக்குரிய ஒரு முக்கிய பாத்திரம் குறைந்துவிடும். அதுதான் அந்த நிலவு.*

(?) பேச்சாளர்கள் ஊமையாவது எப்போது?

*ஒலிபெருக்கி கெட்டுவிடும் போது!*

(?) நேருவுக்குப்பின் காங்கிரசின் கதி யென்ன என்று கேட்கிறீர்களே, அண்ணாவுக்குப் பிறகு உங்கள் கட்சியின் கதி என்னவாகும்?

*ஓங்கி வளர்ந்த பனைமரம் குலைகளோடு விழுந்து விடுகிறது! பரவி வளர்ந்த ஆலுக்கோ ஆயிரம் விழுதுகள் இருக்கின்றன.*

